விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=



# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 190 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 12 செவ்வாய்க்கிழமை (27.06.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## மக்களுக்கு உண்மையை கூறாமல் எப்படி தேர்தலை எதிர்கொள்வது

### ஜனாதிபதி ரணில் கேள்வி



(கொழும்பு)
நாட்டின் பொருளாதார நெருக்கடி தொடர்பான உண்மையை பொதுமக்களுக்கு சொல்லாமல் எப்படித் தேர்தலை எதிர்கொள்வது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

தெற்கு உடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ரணில், பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு எடுத்து வரும் நட 15

## வறுமையில் வாழும் மக்களுக்கு ஜனாதிபதி செய்த நடவடிக்கை என்ன?

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கேள்வி



(கொழும்பு)
நாட்டில் வறுமையில் வாழும் மக்களுக்காக ஜனாதிபதி ரணில் செய்த நடவடிக்கை என்ன 15

## வரிசை யுகத்தை ரணிலே முடிவுறுத்தினார்

### ருவான் விஜயவர்த்தன



(கொழும்பு)
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எரிவாயு கொண்டுவர டொலர்கள் இல்லாத நாட்டை தலைமை தாங்கி, இரண்டு மாதங்களுக்குள் வரிசை யுகத்தை முடிவுக்குக் கொண்டு 15

## தொல்லியல் விவகாரத்தில் பௌத்த தேரர்கள் தலையிடக்கூடாது

### வடக்கு, கிழக்கில் வீண் அச்சம் ஏற்படுகிறது
### புத்தசாசன அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க



(கொழும்பு)
தொல்லியல் விவகாரத்தில் பௌத்த தேரர்கள் தலையிடக்கூடாது அவர்களது செயற்பாடுகளால் வடக்கு, கிழக்கு மக்கள் இடையே வீண் அச்சம் ஏற்படுகிறது என புத்தசாசன அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார். (05ஆம் பக்கம் பார்க்க)

ஜூலை 1ஆம் திகதி முதல்

## கடன் அட்டைக்கான வட்டி விகிதம் குறைப்பு

(கொழும்பு)
கடன் அட்டைக்கான வட்டி விகிதம் ஜூலை 1 ஆம் திகதி முதல் குறைக்கப்படவுள்ளது.

இதன்படி, கடன் அட்டைகளுக்கு அறவிடப்படும் 36 சதவீதமான வருடாந்த வட்டி 34 சதவீதமாக குறைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடன் அட்டைக்கான வட்டி விகிதங்கள் மிக அதிகமாக இருப்பதாக வாடிக்கையாளர்கள் சமீபத்தில் புகார் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்குவோம்

### சீனா மீண்டும் உறுதி

(கொழும்பு)
இலங்கையில் பொருளாதார சமூக அபிவிருத்தி மற்றும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு தொடர்ச்சியாக ஒத்துழைப்பு வழங்குவதாக சீனா தெரிவித்துள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரியுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது, சீன வெளியுறவு அமைச்சர் Qin Gang இதனைக் கூறியுள்ளார்.

இலங்கைக்கு 15

## கடன் மறுசீரமைப்பு தொடர்பில் கலந்துரையாட

### நாளை சிறப்பு அமைச்சரவைக் கூட்டம்

நாளை புதன்கிழமை விசேட அமைச்சரவைக் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் குறித்து இங்கு கலந்துரையாடப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் அனை அமைச்சர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடப்பட்டுள்ளது. (ம-7)

## கடன் மறுசீரமைப்பு பிரேரணையை விவாதிக்க

### ஜூலை 1 அவசர பாராளுமன்றக் கூட்டம்

(கொழும்பு)
உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு தொடர்பான பிரேரணையை விவாதிப்பதற்கான அவசர பாராளுமன்றக் கூட்டம் அடுத்த மாதம் 1ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுப்பதற்காக பாராளுமன்ற விவகாரங்களுக் கா 15

## மைத்திரி நாளை யாழ். விஜயம்

(கொழும்பு)
ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 15

## அரசு மக்களை ஏமாற்றி வருகின்றது

### பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்

(கொழும்பு)
அரசாங்கத்தின் அமைச்சர்களும், அதிகாரிகளும் அழகான வார்த்தைகளால் மக்களை ஏமாற்றி வருகின்றனர் என பாராளுமன்ற உறுப்பினரும் பேராசிரியருமான ஜி.எல்.பீரிஸ் தெரி 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்



## திரு.த.தவராஜா

உப அதிபர்

(பயிற்றப்பட்ட ஆசிரியர் - கணிதம் SLTS-I)

அகவை அறுபதில் ஓய்வுபெறும் எமது கல்லூரியின் உப அதிபர் திரு.த.தவராஜா அவர்களுக்கு மணிவிழா வாழ்த்துக்களும் சேவைநலன் பாராட்டுக்களும் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றோம். எமது கல்லூரியில் ஆசிரியராக பணியாற்றி பின் பதில் அதிபராக பதவி உயர்வு பெற்று யா/குப்பிளான் விக்னேஸ்வரா கல்லூரியில் கடமையாற்றி பின் மீண்டும் எம்மோடு இணைந்து உப அதிபராக மிகத்திறம்பட கடமையாற்றி ஓய்வு பெறும் திரு.த.தவராஜா அவர்களின் சேவை மிக உன்னதமானது. நேரம் தவறாமை என்பது அவரது Bench Mark என்று சொன்னால் அது மிகையில்லை. பாடசாலை நாட்களில் தவராஜா சேர் அவர்களை பாடசாலை வாயிலில் காணும்போது நேரம் காலை 7.00 மணி என்பது எல்லோருக்கும் தெரியும்.

மேலும் பாடசாலை நிருவாக விடயங்களில் உரிய விடயங்களை உரிய நேரத்தில் செயற்படுத்தி நிறைவு செய்யவேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை கொண்டவர். ஆசிரியர்களின் வருடாந்த சம்பள ஏற்றம், லீவு விபரங்கள், கடமைலீவு கடிதங்கள் போன்றவற்றில் மிகுந்த அக்கறையுடனும் கண்டிப்புடனும் நடந்து உரிய விடயங்களை பெற்றுக்கொள்வதில் மிக வல்லவர்.

தனக்கு வழங்கப்பட்ட கடமைகளை மிக நேர்த்தியாக உரிய நேரத்தில் செய்து முடித்துவிட வேண்டுமென்பதில் மிகுந்த கரிசனை கொண்டவர். பல்தரப்பட்ட ஆசிரியர்களின் குணநலன்களுக்கு ஏற்ப அவர்களுக்கு ஏற்றவாறு நடந்து நிருவாக விடயங்கள் தொடர்பில் தேவையானவற்றை பெற்றுக்கொள்வதில் வல்லவர். மிக நேர்த்தியான முறையில் அலுவலக விடயங்களை கையாண்ட அவர் ஓய்வுபெற்றுச் செல்வது எமக்கு பாரிய இழப்பாகும். ஓய்வுக் காலங்களில் மன மகிழ்வோடு வாழ வாழ்த்துகின்றோம்.

Best Wishes

(C-6819)

பாடசாலைச் சமூகம்
யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.


### கடன் மறுசீரமைப்பில்

# அரசு தன்னிச்சையாக செயற்பட முடியாது

## உதய கம்மன்பில எம்.பி தெரிவிப்பு

அரசாங்கம் தேசிய கடன் மறுசீரமைப்பு செய்வதாக இருந்தால் பாராளுமன்றம் மற்றும் கடன் உரிமையாளர்களுடன் கலந்துரையாடியே மேற்கொள்ள முடியும்.

அவ்வாறு இல்லாமல் தன்னிச்சையாக செயற்படுமாக இருந்தால் அதனை அரச பயங்கரவாத செயலாகவே நாங்கள் காண்கிறோம் என பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

பிவிதுரு ஹெல உறுமய கட்சி காரியாலயத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

தேசிய கடன் மறுசீரமைப்பு மேற்கொள்வதில்லை என்றே அரசாங்கம் ஆரம்பத்தில் தெரிவித்து வந்தது. ஆனால் பின்னர் சர்வதேச நாணய நிதியத்தின் அழுத்தம் காரணமாகவே அரசாங்கம் தனது நிலைப்பாட்டை தற்போது மாற்றிக் கொண்டுள்ளது.

ஏனெனில் தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தில் எங்கும் தெரிவிக்கப்படவில்லை.

மாறாக பொருளாதாரத்தை ஸ்திரமான நிலையில் வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவே அரசாங்கம் தெரிவித்திருக்கிறது. அதனால் இதற்கு மாற்று வழி எடுத்த கடனை நீக்கிக்கொள்வதல்ல.

அத்துடன் அரசாங்கம் அவ்வாறு தேசிய கடன் மறுசீரமைப்பு மேற்கொள்வதாக இருந்தால் வங்கிகளுடன் கடன் உரிமையாளர்களுடன் கலந்துரையாடி எடுத்த கடனை செலுத்தும் கால எல்லையை நீடித்துக்கொள்ள முடியும். அல்லது வட்டி வீதத்தை குறைத்துக்கொள்ள முடியும்.

இவ்வாறான மாற்றுவழிகளை பயன்படுத்தாமல் கடன் உரிமையாளர்களுடன் இணக்கப்பாடொன்றை ஏற்படுத்திக்கொள்ளாமல் கடன் மறுசீரமைப்பு அரசாங்கம் ஒருதலைப்பட்சமாக தீர்மானித்து பலாத்காரமாக வங்கி மற்றும் ஓய்வூதிய நிதியங்கள் மீது சுமத்த முயற்சிப்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையை நாங்கள் எதிர்க்கிறோம் என்றார். (ம-7)

### லிப்டில் சிக்கி விபத்து

# முன்னாள் சுகாதார அமைச்சர் உயிரிழப்பு

(கொழும்பு)

மின்தூக்கி உடைந்து கீழே விழுந்ததன் காரணமாக முன்னாள் சுகாதார அமைச்சர் டாக்டர்.பி.எம்.பீ.சிறில் (வயது 89) உயரிழந்துள்ளார்.



சிறிபோபுர பகுதியில் உள்ள தனது வீட்டின் மூன்றாவது மாடிக்கு சென்று கொண்டிருந்த போது மின்தூக்கி சரிந்து விழுந்ததில் பலத்த காயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

வீட்டின் வெளியே பொருத்தப்பட்டிருந்த மின்தூக்கியின் மூலம் மூன்றாவது மாடியில் பழுதுபார்க்கும் பணியை பார்வையிடச் சென்றிருந்த போது திடீரென மின்தூக்கி சரிந்து விழுந்ததில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது. (ம-7)

# சீனாவிற்கு குரங்குகள் ஏற்றுமதி செய்யப்படாது

## நீதிமன்றில் உறுதி

இலங்கையில் இருந்து சீனாவிற்கு குரங்குகளை ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கமாட்டோம் என வனஜீவராசிகள் மற்றும் பாதுகாப்பு திணைக்களத்தினால் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே, வனஜீவராசிகள் மற்றும் பாதுகாப்பு திணைக்களம். வழங்கிய உறுதிமொழியை, சட்டமா அதிபரால் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டது.

அரசு நீதிமன்றத்திற்கு வழங்கிய உறுதிமொழியை பதிவு செய்வதற்காக இந்த வழக்கு ஜூலை 6, 2023 அன்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இலங்கையில் இருந்து சீனாவிற்கு குரங்குகளை ஏற்றுமதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்திருந்த கருத்துக்கு-பதிலளிக்கும் வகையில் 30 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இலங்கையின் வனவிலங்கு, இயற்கை பாதுகாப்புச் சங்கம் உட்பட பல விலங்கு ஆர்வலர்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்களால், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுதாரர்கள் தாக்கல் செய்தனர், சீனாவிற்கு குரங்குகளை ஏற்றுமதி செய்வதற்கான எந்தவொரு முடிவையும் இரத்து செய்யுமாறு கோரி மனுதாரர்கள் தாக்கல் செய்தனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகை, மதுப் பழக்கத்தால் தினமும் 100 பேர் உயிரிழப்பு

## வெளியான அதிர்ச்சித் தகவல்

**(கொழும்பு)**

**சிகரெட் மற்றும் மதுபான பாவனையால் நாட்டில் தினமும் 100 பேர் அகால மரணம் அடைவதாக மது மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இவ்வாறான நிலையில், தற்போது சர்வதேச புகையிலை நிறுவனங்கள் கஞ்சாவை வியாபாரமாக செயற்படுத்துவதற்கு மூலோபாயமாக பணத்தை முதலீடு செய்து வருவதாகவும் கூறப்படுகிறது.

அத்துடன் கஞ்சா பாவனையை முதலீட்டுத் திட்டமாக இலங்கையில் நடை முறைப்படுத்த அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை என போதைப் பொருள் தகவல் மையம் குறிப்பிட்டுள்ளது.

எனவே சிறுவர்கள், இளைஞர்கள் மற்றும் முதியோர்களை போதைப்பொருள் பாவனையில் இருந்து காப்பாற்ற அனைவரின் பங்களிப்பும் அவசியம் எனவும் மது மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் வலியுறுத்தியுள்ளது. (நி)

## நாடு திரும்பினார் ஜனாதிபதி ரணில்



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐரோப்பிய சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு நேற்றுக் காலை நாடு திரும்பியுள்ளார். எமிரேட்ஸ் எயார்லைன்ஸ் விமானமான ஈ.கே.650 இல் டுபாயில் இருந்து நேற்று காலை 9.10 மணியளவில் ஜனாதிபதி, கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் நாடுகளுக்கான உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு கடந்த 17ஆம் திகதி ஜனாதிபதி நாட்டில் இருந்து புறப்பட்டுச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## கடந்த ஐந்து மாதங்களில் எரிபொருள் விற்பனையால் 60,000 மில்லியன் லாபம்

### பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

(கொழும்பு)

கடந்த ஐந்து மாதங்களில் மாத்திரம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறுபது ஆயிரம் மில்லியன் ரூபா இலாபத்தை ஈட்டியுள்ளதாக கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன தெரிவித்தார்.

இதன் மூலம் கிடைக்கும் இலாபத்தை எதிர்காலத்தில் மக்களுக்கு வழங்கும் வகையில் கழகம் செயற்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்காலத்தில் எரிபொருளின் விலையை குறைக்க நடவடிக்கை எடுப்போம் என்றும் அவர் தெரிவித்தார். (நி)



ஈழத்தின் கவிஞரும் நாவலாசிரியருமான தீப்செல்வனின் பயங்கரவாதி நாவல் அறிமுக விழா, நேற்று முன்தினம் லண்டனில் நூற்றுக்கணக்கான மக்களின் வருகையுடன் வெகு விமர்சையாக இடம்பெற்றது. வணக்கம் லண்டன் இணையத்தின் பத்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இடம்பெற்ற இந்த நிகழ்வில் திரள் அமைப்பும் இணைந்து முன்னெடுத்தது. அத்துடன் கிளி பீப்பிள் அமைப்பு இதற்கான ஆதரவை வழங்கி உள்ளது.

## மாகாண சபைத் தேர்தல் குறித்து இலங்கையிடம் உறுதிமொழியை எதிர்பார்க்கும் இந்தியா

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அடுத்த மாதம் டில்லிக்கு செல்வதற்கு முன்னரே, மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும் என்ற வாக்குறுதியை கொழும்பிடமிருந்து டில்லி எதிர்பார்க்கின்றது என இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

இந்திய தரப்பால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிறுவுநர் பசில் ராஜபக்ஷவுக்கும் இது தொடர்பில் தெரியப்படுத்தியுள்தாக கூறப்புடுகின்றது.

இதையடுத்தே பசில் ராஜபக்ஷ 'மொட்டு' வின் மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களை பத்திரமுல்ல காரியாலயத்துக்கு அழைத்து இது தொடர்பில் பேசியுள்ளார்.

மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு ரணிலுக்கு இந்தியா அழுத்தம் கொடுக்கவுள்ளது.

அது தொடர்பான நிபந்தனைக்கு அவர் இந்தியா செல்லும் முன்பே உடன்பட வேண்டி வரும் இந்தியா இதையே எதிர்பார்க்கின்றது என்று பசில் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்குப் பணம் இல்லை என்று கூறி வரும் ரணில் அரசு இதே காரணத்தை இந்தியாவிடம் கூறி மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது. (நி)

## மரக்கறிகளின் விலை சற்று அதிகரிப்பு

(கொழும்பு)

சந்தையில் மரக்கறிகளின் விலை சற்று அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி கரட், போஞ்சி, வெண்டிக்காய், கத்தரிக்காய் மற்றும் பாகற்காய் ஆகிய மரக்கறிகள் 1 கிலோ 600 ரூபாவாக உயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் வீழ்ச்சி அடைந்திருந்த மரக்கறிகளின் விலை தற்போது அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

புடோலங்காய் தற்போது கிலோ ஒன்று 400 ரூபாவாக அதிகரித்துள்ளதாக சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (நி)

## போதிய அரிசி கையிருப்பு இல்லை நெல் சந்தைப்படுத்தும் சபை தெரிவிப்பு

(கொழும்பு)

நெல் சந்தைப்படுத்தல் சபையிடம் இப்போது அரிசி போதிய கையிருப்பு இல்லை என்ற தகவல் வெளியாகியுள்ளது.

விலை அதிகரிக்கும் போது அதனை கட்டுப்படுத்த சந்தைக்கு அரிசியை விநியோகிக்கும் வகையில் கையிருப்புக்களை பராமரிப்பதற்காக விவசாய அமைச்சு ஏற்கனவே திறைசேரியிடம் நிதிக்கோரிக்கையை முன்வைத்த போதும், அது ஐந்தாவது முறையாக நிராகரிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்தே நெல் சந்தைப்படுத்தும் சபையிடம் போதுமான அரிசி கையிருப்பை கொண்டிருக்க முடியவில்லை என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. சபைக்கு திருப்தியான கையிருப்பை பேணுவதற்கு 6 பில்லியன் ரூபாய்கள் தேவை என்றபோது உடனடி நிலைமையை சமாளிக்க 2 பில்லியன்களை அமைச்சு கோரிய போதும், திறைசேரி வெறும் 250 மில்லியன் ரூபாய்க்கு மட்டுமே ஒப்புதல் அளித்துள்ளது என்று அமைச்சின் செயலாளரை கோடிட்டு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் ஏற்கனவே நெல் சந்தைப்படுத்தும் சபை, கையிருப்புக்களை பராமரிப்பதற்காக இரண்டு அரச வங்கிகளிடம் இருந்து பெற்ற 21 பில்லியன் ரூபாய்களை இன்னும் திருப்பிச் செலுத்தவில்லை என்று மத்திய வங்கியின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த இரண்டு கடன்களையும் வட்டியையும் திறைசேரியே தற்போது செலுத்துவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

## சீன முதலீடாக இலங்கையில் 150 எரிபொருள் நிரப்பு நிலையங்கள்

### சீனத் தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாளொன்றுக்கு 4 தொன் கச்சா எண்ணெயை சுத்திகரிக்கும் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய சுத்திகரிப்பு நிலையம் சீன முதலீடாக இலங்கையில் நிறுவப்படும் என இலங்கைக்கான சீனத் தூதுவர் குய் சென் ஹாங் தெரிவித்துள்ளார்.

அஸ்கிரி மகா விகாரைக்கு நேற்றுமுன் தினம் விஜயமொன்றை மேற்கொண்டிருந்த சீன தூதுவர் மல்வத்து அஸ்கிரி உபய மகா விகாரையின் மகாநாயக்க தேரர் முன்னிலையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தற்போதுள்ள கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அறுபதுகளில் நிர்மாணிக்கப்பட்டதாகவும், சீன முதலீடாக நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் திறக்கப்பட்டதன் பின்னர் இலங்கையில் எரிபொருள் விநியோகத் துறையில் பல பாரிய மாற்றங்கள் ஏற்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கையில் 150 எரிபொருள் நிரப்பு நிலையங்களின் செயற்பாட்டை ஆரம்பிக்க சீனா திட்டமிட்டுள்ளதாகவும் தூதுவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயதாரகை பிறீமியர் லீக்- 2023 வராகி சூப்பர் கிங்ஸ் சம்பியன்




உதயதாரகை பிறீமியர் லீக்-2023 இறுதிப் போட்டி நேற்று முன்தினம் வட்டுக்கோட்டை YMHA விளையாட்டு கழக மைதானத்தில் தலைவர் டிசாந்தன் தலைமையில் ஆரம்பமானது. இறுதிப் போட்டியில் வராகி சூப்பர் கிங்ஸ் அணி மற்றும் நிச்சாமம் ஞான வைரவர் அணி மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய நிச்சாமம் ஞானவ்வைரவர் அணி 10 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகளை இழந்து 76 ஓட்டங்களை பெற்றிருந்தது.

அதி கூடிய ஓட்டங்களாக குகசாந்தன் 25 ஓட்டங்களையும் மயூரன் 25 ஓட்டங்களையும் தமது அணிக்காக அதிகபட்சமாக பெற்றுக் கொடுத்தார்கள்.


சிறந்த துடுப்பாட்ட வீரர்

77 என்ற ஓட்டத்தினை வெற்றி இலக்காக கொண்டு களமிறங்கிய வராகி சூப்பர் கிங்ஸ் அணி 6 விக்கெட்டுகளை இழந்து 9.2 ஓவர்களில் வெற்றி இலக்கை அடைந்து.

இதன் மூலம் வராகி சூப்பர் கிங்ஸ் அணி 4 விக்கெட்டுகளால் சாம்பியன் ஆகியது. வராகி சூப்பர் கிங்ஸ் அணி சார்பாக அதிக பட்ச ஓட்டங்களாக சீராளன் ஆட்டம் இழக்காமல் 29 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் குகசாந்தன் 2 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

இறுதிப் போட்டியின் ஆட்ட நாயனாக வராகி சூப்பர் கிங்ஸ் அணியின் சீராளன் தெரிவு செய்யப்பட்டார். ஆட்டத்தை மாற்றிய வீரராக பிரதீஷ் தெரிவு செய்யப்பட்டார்.


சிறந்த பந்துவீச்சாளர்

பரிசளிப்பு விழாவில் உதயதாரகை பிறீமியர் லீக் -2023 தொடரில் சிறந்த துடுப்பாட்ட வீரராக வராகி சூப்பர் கிங்ஸ் அணியின் ரம்மியராகுலன் தெரிவானார்.

தொடர் ஆட்டநாயகன் விருதை கூல் போய்ஸ் அணியின் சரத்குமார் பெற்றுக் கொண்டார்.

சிறந்த பந்து வீச்சாளராக வராகி சூப்பர் கிங்ஸ் அணியின் அஷாம் தெரிவானார். அதிகூட சிக்ஸ்க்கான விருதை வராகி சூப்பர் கிங்ஸ் அணியின் ரம்மியராகுலன் பெற்றுக் கொண்டார்.

இத் தொடரில் 4 ஆம் இடத்தை காலையடி கூல் பாய்ஸ் அணியினரும் ,3 ஆம் இடத்தை சுளிபுரம் றைனோஸ் அணியினரும் ,2ஆம் இடத்தினை நிச்சாமம் ஞான வைரவர் அணியினர் பெற்றுக் கொண்டனர்.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக வலம்புரி பத்திரிகையின் முகாமையாளர் மாவை கஜேந்திரன், வட்டு தென்மேற்கு பிரிவின் கிராம உத்தியோகத்தர் சிவகுமாரும் கலந்து சிறப்பித்தனர்.


ஆட்டநாயகன்

இந்த நிகழ்வை தலைமை தாங்கி நடத்தியவர் உதய தாரகை பிறீமியர் லீக் 2023 தலைவர் டிசாந்தன்,விருந்தினர்கள் மற்றும் பொருளாளர் ஆகியோர் பரிசில்களை வழங்கி கௌரவித்தனர். (4)

# வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்ட போட்டி இறுதியாட்ட முடிவுகள்






வலிகாமம் கல்விவலய பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்ட போட்டியின் இறுதியாட்டங்கள் கடந்த திங்கட்கிழமை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

16 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் முதலாமிடத்தை யாழ்ப்பாண கல்லூரி அணியும் இரண்டாமிடத்தை அராலி சரஸ்வதி இந்துக் கல்லூரி அணியும் மூன்றாமிடத்தை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் பெற்றன.

18 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் முதலாமிடத்தை அராலி சரஸ்வதி இந்துக் கல்லூரி அணியும், இரண்டாமிடத்தை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் மூன்றாமிடத்தை தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியும் பெற்றன.

20 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் முதலாமிடத்தை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியும், இரண்டாமிடத்தை அராலி சரஸ்வதி இந்துக் கல்லூரி அணியும் மூன்றாமிடத்தை உடுவில் மகளிர் கல்லூரி அணியும் பெற்றன.(4-6-90)

# 2025 கழக உலகக்கிண்ண கால்பந்தாட்டம் அமெரிக்காவில்

2025 ஆம் ஆண்டில் ஆண்கள் கழகங்களுக்கு இடையிலான பீபா உலகக் கிண்ண கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டி ஐக்கிய அமெரிக்காவில் நடைபெறும் என பீபா அறிவித்துள்ளது.

2000 ஆம் ஆண்டு முதல் நடைபெறும் கழக உலகக் கிண்ண சுற்று போட்டிகளில் இதுவரை தலா 7 கழகங்களே இப் போட்டிகளில் பங்குபற்றி வந்தன. 2025 கழக உலகக் கிண்ணப் போட்டிகளில் முதல் தடவையாக 32 கழகங்கள் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




தொடர்ச்சியாக 3 வருடங்களாக உலகின் 3 பெரிய கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் ஐக்கிய அமெரிக்காவில் நடைபெறவுள்ளன.

2024 ஆம் ஆண்டு கொபா அமெரிக்கா கிண்ண கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியை ஐக்கிய அமெரிக்கா நடத்தவுள்ளது.

2026 ஆம் ஆண்டு பீபா உலகக் கிண்ண சுற்றுப் போட்டியை கனடா, மெக்ஸிக்கோவுடன் இணைந்து ஐக்கிய அமெரிக்கா நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இறுதியாக மொரோக்காவில் நடைபெற்ற 2022 கழக உலகக் கிண்ண கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் சவுதி அரேபியாவின் அல் ஹிலால் கழகத்தை தோற்கடித்து றியல் மட்ரிட் கழகம் ஐந்தாவது தடவையாக சம்பியனாகியிருந்தது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொல்லியல் விவகாரத்தில் பௌத்த தேரர்கள் தலையிடுவதை உடன் நிறுத்த வேண்டும்

## விதுர விக்கிரமநாயக்க

(கொழும்பு)

**தொல்பொருளியல் விவகாரத்தில் பௌத்த தேரர்கள் தலையிடுவதை நிறுத்த வேண்டும். அவர்களது செயற்பாடுகளாலேயே வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள மக்களுக்கு காணி அபகரிப்பு குறித்து வீண் அச்சம் ஏற்படுகிறது.**

இது குறித்து பௌத்த தேரர்களிடம் பல சந்தர்ப்பங்களில் நேரடியாக தெரிவித்துள்ள போதிலும், அவர்கள் அதனை ஏற்க முன்வரவில்லை என புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

தொல்பொருளியல் எனக் கூறி வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் தமிழ் மக்களின் காணிகள் அபகரிக்கப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது. இது தொடர்பில் வினவிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தொல்பொருளியல் என்பது சட்டத்துக்குட்பட்ட விடயமாகும். தொல்பொருள் கட்டளை சட்டம் இன்றும் நடைமுறையிலுள்ளது. அதனை அனைவரும் பின்பற்ற வேண்டும். அத்தோடு இந்த விவகாரத்தில் பௌத்த தேரர்களும் அரசியல் வாதிகளும் தலையிடுவதையும் நிறுத்த வேண்டும். சட்டத்துக்கமைய தொல்பொருள் திணைக்களத்துக்கு மாத்திரம் அதன் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு இடமளிக்க வேண்டும்.

அதனை விடுத்து தொல்பொருள் திணைக்களம் ஆய்வுகளை முன்னெடுக்கும் பகுதிகளுக்குச் சென்று அங்கு சில பௌத்த தேரர்களால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் காரணமாக வீண் பிரச்சினைகள் தோற்றம் பெறுகின்றன. எனவே இந்த விடயத்தில் தலையிடுவதை அவர்கள் நிறுத்த வேண்டும்.

இந்து ஆலயங்களை அழிப்பதற்கோ, தமிழ் மக்களின் காணிகளை அபகரிப்பதற்கோ எந்த நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை. தொல்பொருள் திணைக்களத்தினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள இடங்களில் மாத்திரமே அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்த விடயத்தை அடிப்படையாகக் கொண்டு முயற்சிக்காமல் இலாபத்தை ஈட்ட முயற்சிக்காமல் மக்களின் உண்மையான பிரச்சினைகளுக்கு தீர்வினை வழங்க வட, கிழக்கு அரசியல்வாதிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)



# எரிவாயுவின் விலையை மீண்டும் குறைக்க நடவடிக்கை

(கொழும்பு)

எரிவாயு சிலிண்டரின் விலையை மீண்டும் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி, அடுத்த மாதம் முதல் வாரத்தில் விலைகள் குறைக்கப்படும் என லிட்ரோ நிறுவனத் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார். அரசாங்கத்தின் எரிவாயு விலை சூத்திரத்தின் அடிப்படையில் விலைகள் குறைக்கப்படும் என லிட்ரோ தலைவர் குறிப்பிட்டார்.

இம்மாதம் 4ஆம் திகதி நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில், 12.5 கிலோ எடை கொண்ட எரிவாயு சிலிண்டரின் விலை 452 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன்படி புதிய விலை 3,186 ஆக நிர்ணயிக்கப்பட்டது.

இது தவிர 5 கிலோ எரிவாயுவின் விலை 181 ரூபாவால் குறைக்கப்பட்டு 1281 ரூபாவாகவும் 2.3 கிலோ எடை கொண்ட சிலிண்டரின் விலை 83 ரூபாவால் குறைக்கப்பட்டு 598 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டது. அதன்படி, அடுத்த மாதம் எரிவாயுவின் விலை குறைக்கப்பட்டால், பொருளாதார நெருக்கடியின் பின்னர் தொடர்ந்து நான்காவது முறையாக எரிவாயு விலை குறைக்கப்படுகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. (நி)

# 60 வகையான மருந்துகளின் விலைகள் குறைப்பு

(கொழும்பு)

60 வகையான மருந்துகளின் விலைகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. இந்த விடயம் தொடர்பான அதிவிசேட வர்த்தமானி கடந்த 15 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

டொலரின் பெறுமதி வீழ்ச்சியடைந்த காரணத்தினால் இறக்குமதி செய்யப்படும் மருந்துகளின் விலைகளும் இவ்வாறு குறைக்கப்பட்டுள்ளன.

வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய 500 மில்லிகிராம் பரசிட்டமோலின் புதிய விலை 3 ரூபா 49 சதமாகும்.

10 மில்லிகிராம் இன்சுலினின் அதிகபட்ச சில்லறை விலை 2270 ரூபாவாகும். (நி)

# டெங்கு மரணங்களின் எண்ணிக்கை 27 ஆக உயர்வு

(கொழும்பு)

நாட்டில் பதிவாகியுள்ள டெங்கு உயிரிழப்புகளின் எண்ணிக்கை 27 ஆக உயர்வடைந்துள்ளதாக ஜனாதிபதி டெங்கு ஒழிப்பு நிபுணர் குழு தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 47000 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக நிபுணர் குழுவின் தலைவர், விசேட வைத்திய நிபுணர் சீதா அரம்பேபொல குறிப்பிட்டுள்ளார்.

பதிவாகியுள்ள டெங்கு நோயாளர்களில் 75 வீதமானோர் 15 வயதுக்கு மேற்பட்டவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. டெங்குக் காய்ச்சல் இதற்கு முன்னர் சிறுவர்களிடையே அதிகளவில் காணப்பட்ட போதிலும், தற்போது இளைஞர்களே அதிகளவில் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி டெங்கு ஒழிப்பு நிபுணர் குழுவின் தலைவர், விசேட வைத்திய நிபுணர் ஆனந்த விஜேவிக்ரம குறிப்பிட்டுள்ளார். (நி)

# இராசிபலன்

27.06.2023
ஆனி 12, செவ்வாய்க்கிழமை
நவமி முன்னிரவு 11.41 மணிவரை
அத்தம் பிற்பகல் 12.04 மணிவரை

சுபநேரம் -10.25-11.55 மணிவரை
இராகுகாலம்-2.55-4.25 மணிவரை
உலக நீரிழிவு நோய் தினம்

சந்திராஷ்டமம்- பூரட்டாதி, சதயம்

வளவன்


மேஷம்
உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, உடல் நலன் சீராகும், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.


கடகம்
பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, சகோதர வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும், போசன சுகமுண்டு.


துலாம்
குடும்ப உறுப்பினர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்களால் அலைச்சல்கள் ஏற்படலாம்.


மகரம்
ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், எதிர்பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், வருமானம் திருப்திகரமானதாக அமையும், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்.


ரிஷபம்
சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.


சிம்மம்
தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், புதிய முயற்சிகள் கைகூடும், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.


விருச்சிகம்
குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


கும்பம்
நண்பர்களின் மனம் கோணாது நடந்து கொள்வது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை, இறைவழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள்.


மிதுனம்
பிரியமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், பெற்றோர் வழியில் எதிர்பார்த்த தகவல்கள் வந்து சேரலாம்.


கன்னி
புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், விரும்பிய காரியம் விரும்பியபடியே கைகூடும், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.


தனுசு
உறவினர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.


மீனம்
தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு, புதிய பொருட்சேர்க்கையுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருமத்தால் வந்தவற்றை தருமத்தால் தொலைக்க வேண்டும்.

# நலன்புரி உதவித்திட்டத்தில் முறைகேடு

# வவுனியாவில் கிளர்ந்தெழுந்த மக்கள்!

(குருமன்காடு)

**அரசாங்கத்தின் நலன்புரி உதவித் திட்ட பதிவுகளில் முறைகேடு எனத் தெரிவித்து வவுனியாவில் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகம் முன் மக்களால் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன், ஏ9 வீதி மற்றும் மன்னார் வீதிகளும் மக்களால் முடக்கப்பட்டன.**





நேற்றுக் காலை முதல் மதியம் வரை சுமார் இரண்டு மணித்தியாலத்திற்கு மேலாக இவ் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றதுடன், போக்குவரத்து பாதைகளும் முடக்கப்பட்டிருந்தன.

அரசாங்கத்தினால் நலன்புரி உதவித்திட்ட கொடுப்பனவுகள் வழங்குவதற்கான பெயர்ப் பட்டியல் அண்மையில் வெளிவந்திருந்த நிலையில் இரு நேரம் மட்டும் உணவை உட்கொண்டு வாழ்பவர்கள், விசேட தேவைக்குட்பட்டவர்கள், முதியோர்கள், விதவைகள் உட்பட்ட வறுமைக்கோட்டிற்கு உட்பட்டவர்களின் பெயர்கள் உள்வாங்கப்படாமல் வெளிநாடுகளில் இருப்போர், அரச உத்தியோகத்தர்கள், வசதியானவர்களுக்கே கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதாக தெரிவித்தே இவ் கவனயீர்ப்பு வீதி மறியல் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பிரதேச செயலக வளாகத்தினுள் காலை 9.30 மணியளவில் கள்ளிக்குளம், தேக்கவத்தை, நெளுக்குளம், தோணிக்கல் ஆகிய கிராமங்களை சேர்ந்த மக்களே தமக்கு நீதி கோரி குறித்த போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

அதன் பின்னர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் கோரிக்கைகளை வவுனியா பிரதேச செயலாளர் ந.கமலதாசன் போராட்ட இடத்திற்கு சென்று கேட்டறிந்ததுடன், முறைப்பாடுகளை மேற்கொள்ளுமாறும் தாம் நியாயமான முறையில் விசாரணைகளை முன்னெடுப்பதாகவும் பொதுமக்களிடம் தெரிவித்தார்.

தொடர்ந்தும் பொதுமக்கள் போராட்டத்தினை முன்னெடுத்திருந்ததுடன் மதியம் 12.30 மணியளவில் மாவட்ட அரசாங்க அதிபர் பணிமனையினுள் போராட்டகாரர்கள் உள்நுழைந்தனர்.

மாவட்ட செயலகத்தின் அரசாங்க அதிபர் காரியாலயம் முன்பாக ஒன்று கூடியவர்களுடன் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர கலந்துரையாடியதுடன், அவர்களின் கோரிக்கையினை கேட்டறிந்து கொண்டார்.

அரசாங்கத்தினால் நலன்புரி உதவித்திட்ட கொடுப்பனவுகள் வழங்குவ்தற்கான பெயர்ப்பட்டியல் ஆரம்பப் பட்டியல் மாத்திரமே இது. இறுதிப்பட்டியல் இதுவரை வெளியாகவில்லை. இது தொடர்பில் முறைப்பாடுகளை இணையம் மூலம் மேற்கொள்ள முடியும். அல்லது கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு எமது உத்தியோகத்தர்கள் வருகை தருவார்கள்.

அதன் பின்னரே இறுதிப்பட்டியல் வெளியிடப்படும் எனவும் அரசாங்க அதிபர் உறுதிமொழி வழங்கியதையடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கலைந்து சென்றனர். (4-6-250)

## கைத்தொழில் துறையை மேம்படுத்த சர்வதேச வர்த்தகக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் கைத்தொழில் துறையை விருத்தி செய்யும் நோக்கில் முதன் முறையாக "வடக்கு சர்வதேச வர்த்தகக் கண்காட்சி" எதிர்வரும் ஓகஸ்ட் 11 முதல் 13 வரை யாழ்ப்பாண கலாசார மண்டப வளாகத்தில் நடைபெறவுள்ளது.

கண்காட்சி தொடர்பில் விசேட ஊடக சந்திப்பு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தனியார் விடுதியில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

வடக்கிற்கான கைத்தொழில் துறைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் குறித்த கண்காட்சி நடைபெறவுள்ளது.

புதிய வர்த்தக தொடர்புகள் மற்றும் எதிர்கால வர்த்தக வாய்ப்புகளை கட்டியெழுப்பும் முயற்சியாகவும் வடமாகாண கைத்தொழில் வர்த்தக வணிகங்களின் தளமாகவும் இந்த வடக்கு சர்வதேச வர்த்தக கண்காட்சி அமையுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வடக்கிற்கான கைத்தொழில் துறைகள் மன்றமானது (NCI) ஜேர்மன் நாட்டின் ஆசிய பசுபிக் வியாபார கூட்டமைப்புடன் இணைந்து கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் பல்வேறு தொழில்சார் அபிவிருத்தித் திட்டங்களை வடக்கு மாகாணத்தில் சிறிய நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு நடைமுறைப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-6-33)



வல்லிபுர குருக்கட்டு சித்தி விநாயகர் ஆலய இராஜ கோபுரத்துக்கான அடிக்கல் நாட்டு விழா கடந்த 19 ஆம் திகதி இடம்பெற்றது. (படம்:-மகாலிங்கம்)

## வாகன இலக்கத்தகடுகளை பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள தலைமை அலுவலகத்திலிருந்து கடந்த 21 ஆம் திகதி யாழ்.அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல், யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்கு வரத்து திணைக் களத்திலும் பொது மக்களின் பார்வைக் காக அறிவிப்புப் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் மாவட்டச் செயலக இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப் பதிவுப் புத்தகம், தேசிய அடையாள அட்டை என்பவற்றையும் வாகன உரிமைமாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத்தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் என்பவற்றையும் யாழ்.மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து அலுவலகத்தில் குறிப்பிடப்பட்ட திகதியில் குறித்த நேரத்திற்கு சமர்ப்பித்து தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத் தகடுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என யாழ். மாவட்ட போக்கு வரத்து திணைக்கள உதவி ஆணையாளர் ஆர்.சிவகரன் அறிவித்துள்ளார். (4)

## குருநகரில் ஹெரோயினுடன் இளைஞன் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் ஹெரோயின் போதைப் பொருளுடன் இளைஞன் விசேட அதிரடிப் படையினரால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ்விசேட அதிரடிப் படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், குருநகர் ஐந்து மாடி வீட்டு தொகுதிக்கு அருகில் குறித்த இளைஞனை கைது செய்து சோதனையிட்ட போது, 7 கிராம் 5 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளை மீட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளுக்காக யாழ்ப்பாண பொலிஸாரிடம் இளைஞனையும் மீட்கப்பட்ட போதைப்பொருளையும் பொலிஸ் விசேட அதிரடி படையினர் ஒப்படைத்துள்ளனர். (4-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘ஹொக்ஹேயின்’ போதைப்பொருள் பயன்பாடு

# சர்வதேச ரீதியில் அதிகரிப்பு- ஐ.நா எச்சரிக்கை

(ஜெனிவா)

சர்வதேச ரீதியில் ஹொக்ஹேயின் என்ற போதைப்பொருளின் பயன்பாடு அதிகரித்துள்ளதாகவும் அதற்கான விநியோகங்களும் தற்போது அதிகரித்து வருவதாக ஐக்கிய நாடுகள் சபையின், போதைப்பொருள் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

ஆண்டுதோறும் சர்வதேச ரீதியில் போதைப்பொருள் பாவனை தொடர்பான அறிக்கை வெளியிடப்படுகின்ற நிலையில் 2023ஆம் ஆண்டுக்கான அறிக்கை தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

குறிப்பாக தற்போது, ஐஸ் போதைப்பொருள் உற்பத்தி ஆப்கானிஸ்தானுக்கு அப்பால் சென்று ஏனைய பல நாடுகளில் உற்பத்தி செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2021ஆம் ஆண்டில் ஹொக்ஹேயின் என்ற போதைப் பொருளின் உற்பத்தி அதிகரிப்பு காணப்பட்டிருந்தாகவும் ஹொக்ஹேயினை பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை, படிப்படியாக அதிகரித்து வருவதாகவும் ஐக்கிய நாடுகளின் போதைப்பொருள் அலுவலகம் சுட்டிக்காட்டுகின்றது.

சர்வதேச ரீதியில் கைப்பற்றப்பட்ட ஐஸ் மருந்துகளில் 90 சதவீதமானவை, கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசியா மற்றும் வட அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

## தலைதூக்கும் துப்பாக்கிச் சூடு

### மேலும் 4 பேர் காயம்

(கொழும்பு)

திப்பிட்டிகொட பகுதியில் நேற்று முன்தினம் மோட்டார் சைக்கிளில் வந்த மர்ம நபர்கள், அங்கிருந்த ஒரு குழுவினர் மீது மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் நான்கு பேர் காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் காயமடைந்தவர்கள் கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும், துப்பாக்கிச் சூட்டுக்கு ரி-56 துப்பாக்கி பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் காயமடைந்தவர்கள் 24, 34 மற்றும் 44 வயதுடைய வெல்லம்பிட்டிய, அங்கொட, பேலியகொட மற்றும் தொம்பே ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி)

## உணவு தொண்டையில் சிக்கி ஒரு வயது குழந்தை உயிரிழப்பு

(கொழும்பு)

பொகவந்தலாவை பகுதியில் தாய் ஒருவர் தனது ஒரு வயது மகளுக்கு உணவு ஊட்டிக் கொண்டிருந்த போது உணவு தொண்டையில் சிக்கி குறித்த குழந்தை உயிரிழந்துள்ளதாக பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

பொகவந்தலாவை பிரிட்வெலி தோட்டத்தைச் சேர்ந்த ஆறுமுகன் அகல்யா என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குழந்தைக்கு உணவு ஊட்டிக் கொண்ட்டிருந்த போது உணவு தொண்டையில் சிக்கி குழந்தைக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டதையடுத்து குழந்தை பொகவந்தலாவை மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## உள்வாங்கப்படாத சமுர்த்திப் பயனாளிகள் ஆர்ப்பாட்டம்




(ஹற்றன்)

அரசாங்கத்தினால் புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள ‘அஸ்வெசும’ நலன்புரி திட்டத்தில் தகுதியானவர்கள் உள்வாங்கப்படவில்லை என தெரிவித்து நுவரெலியாவில் பாரிய போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த கவனயீர்ப்பு போராட்டம் நுவரெலியா பிரதேச. செயலகம் மற்றும் நுவரெலியா பிரதான தபால் நிலையத்திற்கு முன்பாக நேற்று முன்னெடுக்கப்பட்டது. (நி)

## கடன் மறுசீரமைப்பின் பின்னரான நெருக்கடிகளுக்கு அரசாங்கமே பொறுப்பு

### சம்பிக்க தெரிவிப்பு



(கொழும்பு)

கடன் மறுசீரமைப்புக்களின் பின்னர் சமூக கட்டமைப்பில் தோற்றம் பெறும் நெருக்கடியை எதிர்கொள்ள அரசாங்கம் தயாராக இருக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கண்டி மல்வத்து மற்றும் அஸ்கிரிய விகாரைகளில் மத வழிபாடுகளில் ஈடுபட்ட தன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் தோல்வியடைந்து விட்டதா இல்லையா என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும் அதற்கு தேர்தலை நடத்த வேண்டும்.

தற்போதைய முன்னேற்றம் தற்காலிகமானதே. சர்வதேச கடன்களை மாத்திரம் மறுசீரமைப்பதாக அரசாங்கம் குறிப்பிட்டது. ஆனால் தற்போது தேசிய கடன்களை மறுசீரமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. பாராளுமன்றத்தின் ஊடாக அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக இந்த வாரம் பாராளுமன்ற கூட்டத்தொடர் இடம்பெறவுள்ளது.

தேசிய கடன் மறுசீரமைக்கப்படும் போது திறைசேரி உண்டியல்களை பெற்றவர்கள், திறைசேரி பிணை முறியங்களை கொள்வனவு செய்தவர்கள் பாதிக்கப்படுவதுடன், வங்கி கட்டமைப்பு,ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பன நிதி நிலைமையில் பாதிக்கப்படும்.

ஆகவே தேசிய கடன் மறுசீரமைக்கப்படும் போது சமூக கட்டமைப்பில் பாரிய முரண்பாடுகள் தோற்றம் பெறும் அதனை எதிர்கொள்ள அரசாங்கம் தயாராக வேண்டும்.

ராஜபக்ஷர்களின் இரண்டு ஆண்டுகால நிர்வாகத்தில் 12 சதவீதமாக காணப்பட்ட ஏழ்மை நிலை 26 சதவீதமாக சடுதியாக அதிகரித்துள்ளது.

மொத்த சனத்தொகையில் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் வறுமையால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என சர்வதேச மதிப்பீடுகள் குறிப்பிட்டுள்ள நிலையில் 22 இலட்ச குடும்பங்களுக்கு மாத்திரம் நிவாரணம் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ தனது அரசியல் தேவைக்காக சமுர்த்தி நிவாரண வழங்கலை பயன்படுத்திக் கொண்டார்.

நடுத்தர மக்களை ஏழ்மை நிலைக்கு தள்ளி அதனூடாக தமது அரசியல் இருப்பை தக்கவைத்துக் கொள்ளும் ராஜபக்ஷர்களின் அரசியலை மக்கள் முடிவுக்கு கொண்டு வர வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

## சுங்கத்தில் தேங்கியுள்ள மூளைக்காய்ச்சல் தடுப்பூசிகள்

(கொழும்பு)

சுகாதார அமைச்சின் அதிகாரிகள் உரிய நேரத்தில் அனுமதி பெறத் தவறியதை அடுத்து, உலக சுகாதார ஸ்தாபனத்தினால், கடந்த மாத ஆரம்பத்தில் இலங்கைக்கு நன்கொடையாக அனுப்பப்பட்ட “மெனிங்கோகோகல்” தடுப்பூசி தொகுதி, இன்னும் சுங்கத்தில் தேங்கியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு ஹஜ்ஜ்” க்குப் புறப்படும் நூற்றுக் கணக்கான இலங்கை முஸ்லிம்களுக்கு கட்டாய மெனிங்கோகோகல் தடுப்பூசி செலுத்தப்பட வேண்டும் என்ற நிலையில் இந்த தகவல் வெளியாகியுள்ளது.

மூளைக்காய்ச்சல் இலங்கையில் அரிதானது என்ற போதிலும் மக்காவில் ஹஜ் செய்யும் யாத்திரிகர்களுக்கு மெனிங்கோகோகல் தடுப்பூசி என்பது சவுதி அதிகாரிகளால் விதிக்கப்பட்ட கட்டாயத் தேவையாகும்.

இந்தநிலையில், இலங்கையின் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திலோ அல்லது பதிவு செய்யப்பட்ட மருந்து நிறுவனங்களிலோ இந்த தடுப்பூசி கையிருப்பில் இல்லை என்று கொழும் பின் ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை உலக சுகாதார ஸ்தாபனத்திடம் இருந்து சுகாதார அமைச்சு ஆயிரம் மெனிங்கோகோகல் குப்பிக்ளை கோரியதாகவும், எனினும் 200 குப்பிகளுக்கு அனுமதி கிடைத்ததாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.


எனினும், இந்த வரையறுக்கப்பட்ட அளவு கூட கொழும்பு துறைமுகத்தில் இருந்து சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோகப் பிரிவினால் எடுத்துச் செல்லப்படவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 152

### வாடிக்கையாளரின் கவனத்தை ஈர்க்க விற்பனையாளன் கையாண்ட யுக்தி



இலங்கையிலிருந்து கனடா நாட்டிலுள்ள வாங்கோவேர் நகரத்துக்குச் சென்ற ஒரு சாமர்த்தியமான இளைஞன், அங்குள்ள மிகப் பெரிய சூப்பர் மார்க்கெட்டுக்குச் சென்று அதன் முதலாளியைச் சந்தித்து, தனக்கு ஒரு விற்பனையாளர் வேலை தருமாறு கேட்டான்.

ஏற்கெனவே இலங்கையில் விற்பனையாளராகப் பணிபுரிந்த அனுபவம் உள்ளது என்று சொன்னான். அவனது தோற்றத்தால் கவரப்பட்ட முதலாளி அவனை வேலையில் அமர்த்திக் கொண்டார். சிறிய பொருட்கள் முதல் விலை உயர்ந்த பொருட்கள் வரை கிடைக்கும் சூப்பர் மார்க்கெட்.

முதல் நாளன்று அவனுக்கு மிகவும் கடுமையான வேலை. மாலையில் பணி முடிந்ததும் அவனை வர வழைத்த முதலாளி கேட்டார். "இன்று உன்னால் எத்தனை வாடிக்கையாளருக்கு விற்பனை செய்ய முடிந்தது". என்னால், ஒருவருக்குத்தான் விற்பனை செய்ய முடிந்ததாகச் சொன்னான். முதலாளிக்கு உடனே கோபம் வந்துவிட்டது. "இங்கே சராசரியாக ஒவ்வொரு விற்பனையாளரும் குறைந்தது இருபது வாடிக்கையாளருக்காவது பொருட்களை விற்பனை செய்ய வேண்டும். சீக்கிரம் உன்னுடைய விற்பனையை அதிகரிக்காவிட்டால், உன் வேலை பறிபோய் விடும்" என்று எச்சரித்து விட்டு "சரி, அந்த ஒரு வாடிக்கையாளருக்கு எத்தனை பவுண்டுக்கு விற்பனை செய்தாய் எனக் கேட்க ஒன்பது இலட்சத்து முப்பத்து மூவாயிரத்து ஐந்து பவுண்டுகள்" எனக் கூற அதிர்ச்சியடைந்த முதலாளி, "அப்படி என்ன பொருட்களை விற்றாய்"

வாடிக்கையாளருக்கு "ஒரு மீன் பிடிக்கும் முள், தூண்டில் மற்றும் அதற்குத் தேவையான பொருட்களை விற்றேன்."

"ஆனால், அவற்றின் விலை இவ்வளவு இல்லையே ?"

"உண்மைதான். இவற்றை அவர் வாங்கிய பின், கடலில் சென்று மீன் பிடிக்கப் படகு இருக்கிறதா என்று கேட்டேன். அவர் இல்லை என்றதால், நமது படகுப் பிரிவுக்கு அழைத்துச் சென்று காட்டி, ஒரு இருபது அடி நீளப் படகை விற்றேன்.

இந்த நீளமான படகை எப்படி எடுத்துச் செல்வீர்கள் எனக் கேட்க, அவரிடம் அவ்வளவு பெரிய கார் இல்லாததால், ஒரு டீலக்ஸ் 4 X 4 ப்ளாஸர் வோல்க்ஸ்வேகன் காரையும் விற்றேன். நடுவே ஓய்வில் அவருக்குத் தங்க இடம் இல்லாததால், மிகப்பெரிய டென்ட் ஒன்றையும் விற்றேன்"


அவர் இவ்வளவையும் வாங்கவா உன்னிடம் வந்தார்? என முதலாளி கேட்க, இல்லை, அவர், தனக்கு தலை வலிப்பதாகவும் ஒரு தலைவலி மாத்திரை வாங்க வந்ததாகவும்தான் சொன்னார். நான்தான், தலைவலிக்கு நல்ல மருந்து, இந்த மீன்பிடிக்கும் பொழுதுபோக்கு என்று சொன்னேன்.

அப்போது முதலாளி கேட்டார்,"நீ இலங்கையில் எங்கு வேலை செய்தேன் என்று சொன்னாய்?" அதுவா முதலாளி தனியார் மருத்துவமனையில் மாஸ்டர் செக்கப் பிரிவு ஆலோசகராக இருந்தேன், ஏன் ?"

இங்கே வா, என் நாற்காலியில் அமர்ந்து இந்தக் கடையை பார்த்துக் கொள். நான் கொஞ்ச நாள் அங்கு சென்று வேலை பார்த்துவிட்டு வருகிறேன்.

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

## 'டைட்டன்' நீர்மூழ்கிக் கப்பல் விபத்து தொடர்பில் கனடா விசாரணை



(ஒட்டாவா)

கனேடியப்பாதுகாப்புபோக்குவரத்து சபை, நீர்மூழ்கிக் கப்பல் விபத்து தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என அறிவித்துள்ளது.

பிரபல டைட்டானிக் கப்பலின் இடிப்பாடுகளை பார்வையிட சென்ற சுற்றுலாப் பயணிகளை தாங்கிய நீர்மூழ்கிக் கப்பல் ஒன்று அண்மையில் விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் நீர்மூழ்கிக் கப்பலில் பயணம் செய்த ஐந்து பேரும் பரிதாபமாக உயிரிழந்திருந்தனர்.

இந்த நிலையில் குறித்த நீர்மூழ்கிக் கப்பல் விபத்துக்குள்ளான விதம் தொடர்பில் விரிவான விசாரணைகள் நடத்தப்படும் என கனடா அறிவித்துள்ளது.

இந்த விபத்து தொடர்பிலான எந்தவொரு விடயங்களைக் கண்டறிந்து கொள்வதற்காக விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

சுமார் 12,500 அடி ஆழத்தில் இந்த விபத்து இடம் பெற்று இருந்தது.

இந்த நீர்மூழ்கிக் கப்பல் கனேடிய கொடியைத் தாங்கியது எனவும் கனேடிய துறைமுகம் ஒன்றிலிருந்து புறப்பட்டது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக கனேடிய போக்குவரத்து பாதுகாப்பு சபை இந்த நீர்மூழ்கிக் கப்பல் விபத்து தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. (நி-5)

## ரஷ்யாவின் நிலை குறித்து ரிஷிசுனக் கவலை தெரிவிப்பு



(லண்டன்)

இதுவரை காலமும் ரஷ்யாவிற்கு ஆதரவாக இருந்து வந்த வாக்னர் குழுவினர் திடீரென அந்நாட்டுக்கு எதிராகத் திரும்பியதையடுத்து ரஷ்யாவில் போர்ப் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

ரஷ்யாவின் நிலை குறித்து தான் கவலையடைவதாகவும் ரஷ்ய மக்களை பாதுகாக்க வேண்டும் எனவும் பிரித்தானியப் பிரதமர் ரிஷி சுனக் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக முக்கிய பகுதிகளில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டது.

இந்நிலையில் ரஷ்யாவின் நிலை குறித்து தான் கவலையடைவதாகத் தெரிவித்துள்ள பிரதமர் ரிஷி சுனக், அனைவரும் அமைதியுடன் இருக்க வேண்டும் எனவும் பொது மக்களைப் பாதுகாக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அமெரிக்க ஜனாதிபதி பைடன், பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன் மற்றும் ஜேர்மன் ஜனாதிபதி ஷோல்ஸ் ஆகியோரிடமும் இது குறித்து பேசியுள்ளதாகவும் ரஷ்யாவின் நிலைமையை உன்னிப்பாகக் கவனித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக போர் இடம் பெற்று வரும் நிலையில் பிரித்தானியா, உக்ரைனுக்கு தனது ஆதரவினை வழங்கி வந்தது. இந்நிலையில் ரிஷி சுனக், ரஷ்ய மக்களுக்காக தமது கவலையினைத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## சீனாவை வ...

## வீட்டை விட்டு ... என வானிலை ஆ...

(பீஜிங்)

சீனா தலைநகர் பீஜிங் உட்பட பல நகரங்களில் கடும் வெப்பம் நிலவுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மக்கள் வீடுகளை விட்டு வெளியே வர வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

ஆசிய நாடுகள் பலவும் கடந்த சில நாட்களாக கடும் வெப்பத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் சீனாவிலும் சில தினங்களாக வெப்பம் மக்களை வாட்டி... தொ... ஜியவே... முறை... தொடு... வெப்ப... பெ... வெப்ப... இது... பதிவா... என ... தெரிவி...

## கடும் வெப்பத்திற்... ஹஜ் கடமை நேற்...

(ஜெத்தா)

கொவிட்-19 கட்டுப்பாடுகளின்றி இந்த ஆண்டு ஹஜ் புனித யாத்திரை முழு வீச்சில் மேற்கொள்ளப்படுகிறது. சுமார் 2 மில்லியனுக்கும் அதிகமான முஸ்லிம்கள் சவுதி அரேபியா சென்றுள்ளனர்.

உலகின் மிகப் பெரிய சமய நிகழ்வாகக் கருதப்படும் ஹஜ் யாத்திரை நேற்று அதிகாரபூர்வமாக ஆரம்பமாகியது. அப்போது முஸ்லிம்கள் வெள்ளை மேலாடை அணிந்து புனித யாத்திரைக்கான முதல் சடங்கை மேற்கொள்வர்.

மக்கா பெரிய பள்ளிவாசலின் மையப் பகுதியிலிருக்கும் புனிதக் கட்டடமான காபாவைச் சுற்றி வலம் வருவதும் அதில் ஒன்று. ஆயிரக்கணக்கான சவுதி அரேபியக் குடியிருப்பாளர்களும் அந்தச் சடங்கில் கலந்து கொள்வர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குற்றச்செயல்களைத் தடுக்க... காப்ப... அதிகா... ரிக்கப்... ஹ... 160 ந... யன் ... சென்ற... யாத்தி... இரவு... இருந்... தொல... நோக்... இ... இடம்... நிலவி... அனை... டிக்கை... பெ... 45 டிகி... யில் ... தெரிவி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# சிரியாவில் வான் தாக்குதல் நடத்திய ரஷ்யா

# சிறுவர்கள் உட்பட 13 பேர் உயிரிழப்பு

(டமகஸ்கார்)

**சிரியாவில் ரஷ்யா நேற்று முன்தினம் நடத்திய வான் தாக்குதல்களில் சிறுவர்கள், பொதுமக்கள் உட்பட சுமார் 13 பேர் உயிரிழந்துள்ளனர் என யுத்த கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.**



உயிரிழந்தவர்களில் இரு சிறார்கள் உட்பட 9 பொதுமக்களும் அடங்கியுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இட்லிப் பிராந்தியத்திலுள்ள ஜஸ்ர் அல் சுகுர் நகரிலுள்ள சந்தையொன்றில் இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இவ்வருடம் சிரியாவில் ஒரே தடவையில் அதிக எண்ணிக்கையானோர் கொல்லப்பட்ட ரஷ்யத் தாக்குதல் இதுவாகும் என மனித உரிமைகளுக்கான சிரிய கண்காணிப்பகத்தின் தலைவர் ரமி அப்தேல் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் கிளர்ச்சியாளர்கள் நடத்திய ட்ரோன் தாக்குதலில் இரு சிறார்கள் உட்பட 4 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். ஜனாதிபதி பஷர் அல் அஸாத்துக்கு ஆதரவளித்து வரும் ரஷ்யப் படையினர், மேற்படி ட்ரோன் தாக்குதலுக்கான பதிலடியாக இத்தாக்குதலை நடத்தியுள்ளனர் என மனித உரிமைகளுக்கான சிரிய கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. (நி-5)

## வ வாட்டும் வெப்பம்

## டு வெளியேற வேண்டாம்

## ல ஆய்வு மையம் எச்சரிக்கை

வாட்டி வருகிறது.

தெற்கு பெஜ்ஜிங்கின் நான்ஜியவோ ஆய்வகத்தில் முதல் முறையாக கடந்த 3 நாட்களாகத் தொடர்ந்து 40 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவாகி உள்ளது.

பெஜ்ஜிங்கில் 41.1 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவானது.

இது தலைநகரில் இம்மாதத்தில் பதிவாகியுள்ள அதிகபட்ச வெப்பம் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனால் மக்கள் வீடுகளை விட்டு வெளியே வர வேண்டாம்.

வெளியில், பொது இடங்களில் நீண்ட நேரம் சுற்ற வேண்டாம்.

அனைவரும் வெப்பத் தாக்கத்திலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என அறி வுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## பாகிஸ்தானில் மின்னல் தாக்கியதால்

## சுமார் 11 பேர் உயிரிழப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் மின்னல் தாக்கியதால் சுமார் 11 பேர் உயிரிழந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பஞ்சாப் மாகாணத்தின் பல பகுதிகளில் நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவங்களில் மேலும் ஐவர் காயமடைந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நரோவால், சியால்கெட், ஷேக்குப்ரா பிரதேசங்களில் இச்சம்பவங்கள் இடம்பெற்றதாக உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

பாகிஸ்தானின் பல மாகாணங்களில் கடந்த சில தினங்களாக கடும் மழை பெய்து வருகிறது.

இம்மழை காரணமாக பஞ்சாப் மாகாணத்தின் பெரிய நகரங்களில் வெள்ளம் ஏற்படலாம் எனவும் கைபகர் பக்துன்கவா, கில்கித் பாகிஸ்தானில் மண்சரிவுகள் ஏற்படலாம் எனவும் பாகிஸ்தானின் காலநிலை மாற்ற விவகார அமைச்சர் ஷெரி ரஹ்மான் எச்சரித்துள்ளார். (நி-5)

## த்திற்கு மத்தியில்

## நேற்று ஆரம்பம்

தடுக்கவும் யாத்திரிகர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் பாதுகாப்பு அதிகாரிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஹஜ் கடமைக்காக ஏற்கனவே 160 நாடுகளைச் சேர்ந்த 1.6 மில்லியன் வெளிநாட்டவர்கள் சவுதியை சென்றடைந்துள்ளனர். இந்நிலையில் யாத்திரிகர்கள் நேற்று முன்தினம் இரவு மக்கா பெரிய பள்ளிவாசலில் இருந்து சுமார் ஐந்து கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் மினாவை நோக்கிய பயணத்தை ஆரம்பித்தனர்.

இம்முறை கோடை காலத்தில் ஹஜ் இடம்பெறும் நிலையில் கடும் வெப்பம் நிலவி வருகிறது. இதனையொட்டி அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

பெரிய பள்ளிவாசலில் வெப்பநிலை 45 டிகிரி செல்சியஸை தொட்ட நிலையில் யாத்திரிகர்கள் மீது தண்ணீர் தெளிக்கப்பட்டது. பள்ளிவாசலுக்குள் ஆயிரக்கணக்கான துணை மருத்துவர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர்.

2019 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மிகப் பெரிய ஹஜ் கடமையாக இது அமையவுள்ளது. கொரோனா தொற்று உச்சம் பெற்றிருந்த 2020 இல் 10,000 யாத்திரிகர்கள் மாத்திரமே அனுமதிக்கப்பட்டதோடு 2021 இல் அது 59,000 ஆக அதிகரிக்கப்பட்டது. கடந்த ஆண்டு ஒரு மில்லியன் யாத்திரிகர்கள் பங்கேற்றிருந்தனர்.

கடந்த ஆண்டை விடவும் இம்முறை 9 இலட்சத்து 26 ஆயிரம் யாத்திரிகர்கள் அதிகமாக வருகை தந்திருப்பதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. குற்றச் செயல்களைத் தடுக்கவும் யாத்திரிகர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் பாதுகாப்பு அதிகாரிகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (நி-5)

## உக்ரைனுக்கு ஆதரவளிப்பதற்கு அவுஸ்திரேலியா இணக்கம்

(கன்பெரா)

ரஷ்யாவிற்கு எதிராக போரிடுவதற்கு உக்ரைனுக்கு புதிதாக உதவிகளை வழங்குவதற்கு அவுஸ்திரேலிய பிரதமர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

73.5 தசம் 5 மில்லியன் அமெரிக்கா டொலர் பெறுமதியான உதவிகளை வழங்குவதாக பிரதமர் தெரிவித்துள்ளார். அத்துடன் உக்ரைனின் வெற்றிக்கு தொடர்ந்தும் ஆதரவு வழங்குவதற்கு அவுஸ்திரேலியா அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை உக்ரைன் ஜனாதிபதி வெலோடிமீர் ஜெலென்ஸ்கி மற்றும் அமெரிக்க ஜனாதிபதி ஜோபைடன் ஆகியோருக்கிடையில் தொலைபேசி வழியான கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

ரஷ்யாவினால் ஏற்பட்ட கிளர்ச்சி குறித்தும் உக்ரைனின் தற்போதைய எதிர் தாக்குதல் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## டில்லியில் வெள்ளப்பெருக்கு 62 ஆண்டுகளின் பின் பேரிடர்



மும்பை காட்கோபர் பகுதி

(டில்லி)

டில்லி மற்றும் மும்பையில் 62 ஆண்டுகளுக்கு பின்னர் முதல் தடவையாக தென்மேற்குப் பருவமழை ஒரேநாளில் ஆரம்பித்துள்ள நிலையில், பாரிய வெள்ள நிலைமை ஏற்பட்டுள்ளது.

தாழ்வான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன், வீதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதால் பல இடங்களில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

மும்பை காட்கோபர் பகுதியில் 3 மாடி கட்டடம் தொடர் மழையால் இடிந்து வீழ்ந்துள்ள நிலையில், அதில் சிக்கிக்கொண்டவர்களை தீயணைப்புப் படையினர் மற்றும் பேரிடர் மீட்புக் குழுவினர் மீட்டனர்.

இதற்கிடையே மத்திய மகாராஷ்டிராவில் மேலும் 2 நாட்களுக்கு கனமழை பெய்யும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத காணி அபகரிப்பு

# கிளிநொச்சியில் போராட்டம்



(கிளிநொச்சி)

**சட்டவிரோத காணி அபகரிப்பை தடுத்து நிறுத்தக் கோரி மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றினை நேற்று முன்னெடுத்தனர்.**

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பொன்நகர் பகுதியில் அமைந்துள்ள காணிகளை அரச அதிகாரிகள் தன்னிச்சையாக முடிவெடுத்து தமக்கு விரும்பியவர்களுக்கு வழங்கி வருவதாக குற்றஞ்சாட்டி அப்பகுதியில் வாழும் மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். எதிர்ப்பு ஆர்ப்பாட்டமானது கிளிநொச்சி டிப்போ சந்தியில் ஆரம்பித்து கரைச்சி பிரதேச செயலாளர் அலுவலகம் மற்றும் மாவட்ட செயலகம் முன்பாக சென்று நிறைவடைந்தது. மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரனின் பார்வைக்காக மகஜர் ஒன்றும் மேலதிக அரசாங்க அதிபர் சிறிமோகனிடம் கையளிக்கப்பட்டது. (4-6-316)

# வீடு புகுந்து திருட முற்பட்டவர் பொதுமக்களால் நையப்புடைப்பு

(குருமன்காடு)

வவுனியா பத்தினியார் மகிழங்குளம் கிராமத்தில் வீடு புகுந்து திருட முற்பட்ட நபரை பொதுமக்கள் நையப்புடைத்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குறித்த பகுதியிலுள்ள வீடொன்றினுள் இனந்தெரியாத நபரொருவர் புகுந்து வீட்டிலுள்ள பொருட்களை திருட முயற்சித்துள்ள சமயத்தில் வீட்டிலிருந்தவர்கள் கூச்சல் இட்டமையினையடுத்து அந்நபர் அங்கிருந்து தப்பியோடியுள்ளார். எனினும் குறித்த நபரை மடக்கிப்பிடித்த அயலவர்கள் நையப்புடைத்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் குறித்த நபரை கைது செய்து பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து சென்றமையுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட நபர் பல்வேறு திருட்டுச்சம்பவங்கள் தொடர்பில் பல தடவைகள் வவுனியா பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (4-6-250)

## பருத்தித்துறை

# மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை 200 ஆவது ஆண்டு விழா



(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் 200 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று, நாளை, நாளைமறுதினம் ஆகிய தினங்கள் இடம்பெறவுள்ளன.

முதல் நாள் நிகழ்வாக துவிச்சக்கரவண்டி பவனியும் இளைப்பாறிய அதிபர், ஆசிரியர்கள் கௌரவிப்பும் இடம்பெறும்.

இரண்டாம் நாள் நிகழ்வாக முத்திரை வெளியீடும் நூல் வெளியீடும் இடம்பெறும்.

மூன்றாம் நாள் நிகழ்வாக பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும் திறன்வகுப்பறை திறப்பு விழா, 200 ஆவது ஆண்டிற்கான புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நுழைவாயில் திறப்பு விழாவும் இடம்பெறவுள்ளன. (4-6)

# நியாயமான விலையில் நெல்லை அரசு கொள்வனவு செய்ய வேண்டும்

## முன்னாள் எம்.பி சந்திரகுமார்

(கிளிநொச்சி)

சிறுபோகத்தில் அறுவடை செய்யப்படும் நெல்லுக்கு அரசு நியாயமான விலையை தீர்மானித்து அதனை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

காலம் காலமாக தாம் அறுவடை செய்யும் நெல்லை நியாயமான விலையில் விற்பனை செய்ய முடியாது விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இதனால் ஏராளமான விவசாயிகள் வாழ்நாள் கடன்காரர்களாக காணப்படுகின்றனர்.

இந்த நிலைமைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

கிளிநொச்சி போன்ற மாவட்டங்களில் அதிகளவில் சிறுபோக நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் நெருக்கடிகளை எதிர்கொண்டே பயிர்ச் செய்கையை மேற்கொண்டனர்.

இந்த நிலையில் அவர்களால் அறுவடை செய்யப்படும் நெல்லுக்கும் நியாயமான விலை நிர்ணயம் செய்யப்பட்டு அதனை கொள்வனவு செய்ய அரசு ஒரு பொறிமுறையை ஏற்படுத்தத் தவறின் விவசாயிகள் மேலும் பாதிக்கப்படுவார்கள் என அறிவித்தார். (4-6)

# உலர் உணவு வழங்கல்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மேற்கு மனோன்மணி அம்பாள் ஆலய அன்னதானசபை ஆரம்ப கர்த்தாவும் தற்போது கனடாவில் வசிக்கும் ந.கிருஷ்ணப்பிள்ளையின் நிதி பங்களிப்பில் புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தில் பெருளாதாரத்தில் நலிவுற்ற குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் நாளை புதன்கிழமை மனோன்மணி அம்பாள் ஆலய அன்னதான மண்டபத்தில் வழங்கப்படவுள்ளது.

இந் நிகழ்வில் வேலணைப் பிரதேச செயலர் சிவகரன், நிர்வாக அதிகாரி சிவகணேசன், ஜே/29, ஜே/30 கிராம உத்தியோகத்தர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (4-6)





இலங்கையில் முதல் முறையாக USAID Srilanka, IREX இணைந்து நடத்திய தொலைபேசி ஊடகவியல் விருது விழாவில் தமிழ்,சிங்கள,ஆங்கில கதைகளில் மன்னார் மாவட்ட ஊடகவியளாலர் ஜோசப்நயனின் கதை சிறந்த கதையாகத் தெரிவு செய்யப்பட்டு விருது வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்,சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் சமர்ப்பிக்கப்பட்ட 300 கதைகளில் மன்னார் பேசாலை பகுதியில் மீன்பிடி சார்ந்த உபதொழில்களை மேற்கொண்டு வரும் மீனவப் பெண்கள் தொடர்பாக மன்னார் மாவட்ட ஊடகவியளாலர் ஜோசப் நயனால் உருவாக்கப்பட்ட கதை முதலாவது இடத்தை பெற்றுக் கொண்டது. (படம்: ஜோசப்நயன்)



புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் போசாக்கு மாதத்தை முன்னிட்டு நேற்று கண்காட்சி நிகழ்வு இடம்பெற்றது.



நூலாசிரியர்கள் லி.குகநாதன், எஸ்.லி.பாலமுரளி ஆகியோரின் கணிதபாட பயிற்சி நூல்கள் மு/கோட்டைகட்டியகுளம், அ.த.க பாடசாலைகளில் 6-11 வரையான மாணவர்களுக்கு அண்மையில் அன்பளிப்பு செய்யப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்தினபுரி-கொழும்பு பிரதான வீதியில் பாரிய விபத்து -20 பேர் காயம்



(கொழும்பு)

இரத்தினபுரி - கொழும்பு பிரதான வீதியில் புஸ்ஸல்ல ஆசிரியப் பயிற்சி நிலையத்துக்கு அருகில் தனியார் பேருந்து சொகுசு பேருந்துடன் மோதியதில் பாரிய விபத்து ஏற்பட்டுள்ளது. நேற்று முற்பகல் 10 மணி யளவில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது. விபத்துக்குள்ளான சொகுசு பேருந்து முன்னோக்கி நகர்ந்தமையினால் பாதை ஓரமாக நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் மற்றும் வேன் மீது மோதியது.

இந்த விபத்தில் 20 பேர் காயமடைந்து மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 5 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# இலங்கை வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

## 20 நாட்களில் 61 ஆயிரம் பேர் வருகை

(கொழும்பு)

இம்மாதத்தின் முதல் 20 நாட்களில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 61,183 என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இம்மாதம் 87,521 சர்வதேச பார்வையாளர்களை கவர்ந்திழுப்பதை சுற்றுலாத்துறை இலக்காகக் கொண்டிருந்த நிலையில், இலங்கை தனது இலக்கில் 70 சதவீதத்தை அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# உலக நடனப் போட்டிக்கு தமிழ்ச் சிறுவர்கள் தெரிவு

(கொழும்பு)

அமெரிக்காவில் இடம்பெறவுள்ள உலகின் மிகப்பெரிய நடன நிகழ்வான வேர்ள்ட் ஒப் டான்ஸ் நிகழ்ச்சிக்கு இலங்கையிலிருந்து ஐந்து தமிழ் சிறுவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

உலகிலுள்ள 25 நாடுகளின் பங்கேற்பாளர்களுடன் 2007 ஆம் ஆண்டு முதல் இடம்பெறும் இந்நிகழ்வுக்கு இலங்கையிலிருந்து நடனக்குழு தெரிவு செய்யப்பட்டது இதுவே முதல் முறையாகும்.

இலங்கையின் கொட்டஹேன மற்றும் வெள்ளவத்தை பகுதிகளில் இயங்கும் நடன பள்ளியில் பயிலும் மாணவர்களே இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். 25 நாடுகளுடனான போட்டியாளர்களுடன் இரு சுற்றுக்களில் இலங்கை போட்டியாளர்கள் பங்குபற்றவுள்ளனர். ஓகஸ்ட் 12 ஆம் திகதி இந்நிகழ்ச்சியின் இறுதிப் போட்டி அமெரிக்காவின் கலிபோர்னியா நகரில் இடம்பெறவுள்ளது.

கடந்த வருடம் இந்திய போட்டியாளர்கள் வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இம்முறை இலங்கையிலிருந்தும் போட்டியாளர்கள் கலந்து கொள்வதற்கு வாய்ப்பு கிடைக்கப் பெற்றுள்ளது. (நி)





| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 220 | 200 | 240 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 600 | 600 | 700 | 800 |
| தக்காளி | 250 | 250 | 250 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 240 | 200 | 300 |
| கோவா | 300 | 250 | 250 | 300 |
| கரட் | 300 | 440 | 450 | 480 |
| பூசணி | 120 | 80 | 100 | 100 |
| புடோல் | 200 | 140 | 180 | 240 |
| வாழைக்காய் | 100 | 200 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 350 | 280 | 300 | 450 |
| பெரிய வெங்காயம் | 130 | 130 | 120 | 140 |
| பாகற்காய் | 450 | 500 | 500 | 800 |
| வெண்டக்காய் | 300 | 220 | 150 | 400 |
| கருணைக் கிழங்கு | 180 | 160 | 180 | 200 |
| பயற்றங்காய் | 450 | 500 | 400 | 450 |
| லீக்ஸ் | 300 | 300 | 320 | 400 |
| பீற்றூட் | 420 | 350 | 400 | 400 |
| கறிமிளகாய் | 350 | 400 | 400 | 450 |
| முருங்கைக்காய் | 600 | 700 | 600 | 800 |
| போஞ்சி | 550 | 500 | 500 | 600 |
| சுத்தரிதம்புள்ள | 160 | 150 | 120 | 200 |
| கீரை - 1 பிடி | 60 | 60 | 60 | 80 |
| தேசிக்காய் | 300 | 300 | 250 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 80 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 350 | 250 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 450 | 500 | 500 | 800 |
| முள்ளங்கி | 120 | 160 | 180 | 250 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 40 | 35 | 50 | 60 |
| ஈரப்பலா | 150 | 200 | 180 | 200 |




கைலேஸ்




மிலேஸ்




தாருக்சன்




சஞ்சனா




மதுமிதா




சாமந்தி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.



# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர்

214





பார்த்தது பார்த்தபடியே நின்றான். அவனுக்கும் இளைய பிராட்டி குந்தவைக்கும் மத்தியில் ஒரு பூங்கொடி தன் இளந்தளிர்க் கரத்தை நீட்டி இடைமறித்து நின்றது.

அந்தக் கொடியில் ஓர் அழகிய பட்டுப்பூச்சி பல வர்ண இறகுகள் படைத்த பட்டுப் பூச்சி வந்து உட்கார்ந்தது. குந்தவை தன் பொன் முகத்தைச் சிறிது குனிந்து அந்தப் பட்டுப் பூச்சியைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

வந்தியத்தேவனோ குந்தவையின் முக மலரையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டு நின்றான். ஓடையில் அலைகள் ஓய்ந்து அடங்கின. பட்சி ஜாலங்கள் பாடுவதை நிறுத்தின. அண்ட பகிரண்டங்கள் அசையாது நின்றன. பல யுகங்கள் சென்றன.

### நாற்பத்தெட்டாம் அத்தியாயம்
### நீர்ச் சுழலும் விழிச் சுழலும்

கடவுள் படைத்த ஆதி மனிதன் ஒரு மலையின் சாரலில் வசித்தான். மழைக்கும் காற்றுக்கும் அவனுக்கு மலைக் குகை அடைக்கலம் தந்தது. வன விருட்சங்கள் அவனுக்குத் தேவையான கனி வர்க்கங்களை உணவாக அளித்தன. காட்டு மிருகங்கள் அவனைக் கண்டு நடுநடுங்கின. வானத்துப் பறவைகளைப் போல் அவன் சுயேட்சையாக ஒரு குறையும் இல்லாமல் வாழ்ந்து வந்தான். ஆயினும் அவனுடைய உள்ளத்தின் உள்ளே ஏதோ ஒரு குறை, இனந்தெரியாத ஒரு வகைத் தாபம், இடைவிடாமல் குடிகொண்டிருந்தது. ஏதோ ஒரு காந்த சக்தி அவனைக் கவர்ந்து இழுத்துக் கொண்டிருந்தது. ஏதோ ஓர் அரிய பொருளை, இதுவரை பார்த்தும் அனுபவித்தும் அறியாத இன்பத்தை, அவனுடைய இதயம் தேடிக் கொண்டிருந்தது. பகலில் அதைப் பற்றிக் கற்பனை செய்தான். இரவில் அதைப் பற்றிக் கனவு கண்டான். "எனக்காகவே படைக்கப்பட்ட அந்த அற்புதப் பொருளை, கற்பகக் கனியை, என்னைக் கவர்ந்திழுக்கும் காந்தத்தை, எங்கே காண்பேன்? எப்போது காண்பேன்?" என்று அவன் இதயம் ஏங்கித் தவித்துக் கொண்டிருந்தது. ஆதிமனிதனைப் படைத்த அதேசமயத்தில் இறைவன் ஆதி ஸ்திரீயையும் படைத்தார். மலையின் மற்றொரு பக்கத்துச் சாரலில் அவள் வசித்து வந்தாள். பசிக்கு உணவும் தாகத்துக்குச் சுனை நீரும் தங்கியிருக்க மலைக் குகையும் அவளுக்கு இருந்தன. வெளிப்படையாகப் பார்த்தால் ஒரு குறையும் இல்லை. ஆனால் உள்ளத்தினுள்ளே ஒரு தீப்பிழம்பு ஜுவாலை விட்டு அவளை எரித்துக் கொண்டிருந்தது. ஏதோ ஒரு சக்தி அவளைக் கவர்ந்து இழுத்துக் கொண்டிருந்தது. அச்சக்தி எங்கிருந்து அவளை இழுக்கிறது, எந்தத் திசையை நோக்கி இழுக்கிறது என்பது ஒன்றும் தெரியவில்லை.

ஆதிமனிதனுக்கும் ஆதி ஸ்திரீக்கும் இடையில் ஒரு பெரிய மலை ஓங்கி நின்று ஒருவரையொருவர் சந்திக்க முடியாமல் தடுத்துக் கொண்டிருந்தது.

வெயிற் காலத்தில் ஒரு நாள் இயற்கை நியதி காரணமாகக் காட்டில் தீ மூண்டு நாலாபுறமும் பரவத் தொடங்கியது. மலையைச் சுற்றி நெருப்பு அதிவேகமாகப் பரவி வந்தது. மனிதனும் ஸ்திரீயும் காட்டுக்குள் போனால் ஆபத்துக்குள்ளாவோம் என்று உணர்ந்து மலை மேல் ஏறினார்கள். மலையின் உச்சியில் அவர்கள் ஒருவரையொருவர் பார்த்தார்கள். பார்த்த கண்கள் பார்த்தபடி கண் கொட்டாமல் நின்றார்கள். (தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## குருடர்கள் எவ்வளவு?



ஒருநாள், மன்னர் அக்பர் ஒரு ஐயத்தை எழுப்பினார். உலகத்தில் குருடர்கள் தொகை எவ்வளவு? "இந்த வினாவுக்கு சபைலிருந்தவர்களுள் பெரும் பகுதியினர் உலத்தில் குருடர்களின் தொகை எவ்வளவு என்பதைத் துல்லியமாகக் கூறுவது கடினம். ஆனால், கண் பார்வை உள்ளவர்களை விட கண் பார்வையற்றவர்கள் தொகை மிகமிகக் குறைவாகத் தான் இருக்கும் என்னும் கருத்தைத் தெரிவித்தனர். அக்பர் "பீர்பார்பால்! உம் கருத்து என்ன?" எனக் கேட்டார்.

பீர்பார்பால் எழுந்து, "மன்னர் பெருமானே ! இப்போது இங்கு சொல்லப்பட்ட கருத்தே குருட்டுத்தனமானதாகும். உலகத்தில் கண்பார்வையற்ற குருடர்களின் தொகை தான் மிகமிக அதிகம். குறிப்பாகச் சொல்வதானால், இந்த உலகத்தில் பெரும்பகுதியினர் குருடர்கள் தாம்" என்றார்.

"பீர்பார்ப்பால்! உமது கருத்து விநோதமாய் இருக்கிறதே! உம் கருத்துப்படி இந்தச் சபையில் இருப்பவர்களுள் பெரும் பகுதியினர் குருடர்கள் தாம் என்று கூறுவீர் போலிருக்கிறதே?" என்றார் அக்பர்.

"அதிலென்ன சந்தேகம்?" என்றார் பீர்பார்பால்" அப்படியானால் நானும் ஒரு குருடனா ?" என்றார் அக்பர். அதற்கு "பொதுவாக ஒரு மனிதனை என்ன காரணத்தைக் கொண்டு குருடன் என்று கூறுகிறோம்?" என்று வினா எழுப்பினார் பீர்பார்பால்.

"ஒரு பொருளை, அது இன்ன பொருள் தான் என்று சரியாக அடையாளம் கண்டு கொள்ள முடியாதவனைப் பொதுவாகக் குருடன் என்று கூறுகிறோம்" என அக்பர் மறுமொழி சொன்னார்.

"இப்போது ஒரு சோதனை செய்து பார்ப்போம்" என்று கூறி ஒரு துணியை எடுத்து, "மன்னர் அவர்களே! இது என்ன?" என்று கேட்டார். அது ஒரு துண்டுத் துணி!" என்றார் மன்னர்.

பீர்பார்பால் அதே துணியைத் தமது தலையில் ஒழுங்காகச் சுற்றிக் கட்டிக் கொண்டு, "இது என்ன?" என்று கேட்டார். "அது ஒரு தலைப் பாகை!" என்றார் மன்னர். பீர்பார்பால் அதே துணியைக் கழுத்தில் தொங்க விட்டுக் கொண்டு, இப்போது இது என்ன?" என்றார்.

அது "கழுத்துக் குட்டை அல்லது சவுக்கம்" என்றார் அக்பர். பீர்பார்பால். கழுத்துத் துணியை எடுத்துத் இடுப்பில் சுற்றிக் கட்டிக் கொண்டார். இப்போது இது என்ன துணி என்றார் பீர்பார் பால். இப்போது அது லுங்கி அல்லது வேஷ்டி என்று கூறலாம் எனக் கூறி னார்.

பீர்பார்பால் அக்பரை நோக்கிப் பணிவான குரலில், "மன்னர் பெருமானே! என் கையில் இருக்கும் இந்தத் துண்டுத் துணியைப் பற்றி உங்களால் ஒரே மாதிரியான கருத்தைக் கூற முடியவில்லை. கண்களால் இதனை நன்றாகப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, ஒரு பொருளைப் பற்றிப் பல விதமான கருத்துக்களைக் கூறினீர்கள்.

ஒரு குருடனின் நிலையும் இது தானே. தன்க்கு பார்வையில்லாத காரணத்தால், ஒரு பொருளைப் பற்றித் தெளிவான கருத்தை அவனால் கூற முடியவில்லை.

இப்போது தங்கள் நிலையும் அதுவாகத் தானே இருக்கிறது? பார்வையுள்ளவர்கள் என்று கர்வப்பட்டுக் கொண்டிருப்பவர்கள் என்னையும் சேர்த்துத் தான் கூறுகிறேன்.

கண் இருந்தும் குருடர்களாகத்தான் இருக்கிறோம். இந்தக் கண்ணோட்டப்படி பார்த்தால், குருடர்களை விடக் கண்பார்வையுள்ள குருடர்களின் தொகை மிகவும் அதிகம் என்று நாம் கருதலாமல்லவா?" என்று கூறினார்.

ஆழ்ந்த சிந்தனை வளத்துடன் கூடிய, உண்மைகள் நிறைந்த பீர்பார்பாலின் அந்தச் சொற்களைக் கேட்டு, மிகவும் பாராட்டினார் அக்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கையே இனிமையான எதிர் காலங்களை உருவாக்குகிறது !

– ஸ்ரீ அன்னை

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சர்வதேசத்தை தன்வசப்படுத்திய இந்தியப் பிரதமர் மோடி

எங்கள் இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பது சாத்தியமாக வேண்டுமாயின், அதற்கு இந்தியாவின் ஆதரவு நிச்சயம் தேவை.

இலங்கை ஆட்சியாளர்களுக்கு இந்தியா அழுத்தம் கொடுக்காதவரை, அவர்கள் இனப் பிரச்சினைக்கான தீர்வு பற்றி ஒருபோதும் சிந்திக்க மாட்டார்கள்.

இதை நாம் கூறும்போது, ஐ.நா சபையின் தீர்மானங்கள் இலங்கைக்கு எதிராக இருப்பது எமக்குச் சாதகமல்லவா? என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

இருந்தும் ஐ.நாவின் தீர்மானங்கள் என்பன எழுத்துருவில் மட்டும் இருக்கக்கூடியவை என்பதையும் நாம் மறந்துவிடலாகாது.

ஆக, ஐ.நா சபை எடுக்கின்ற தீர்மானங்கள் அமுலாக வேண்டுமாயின், அதற்கு அண்டை நாடான இந்தியாவின் ஆதரவு நிச்சயம் இருந்தாக வேண்டும்.

அதாவது பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் நினைத்தால் மட்டுமே எங்களின் பிரச்சினைக்கான தீர்வு சாத்தியமாகும்.

தவிர, இலங்கை விடயத்தில் பிரதமர் நரேந்திர மோடியைத் தாண்டி எந்த நாடும் இலங்கை அரசாங்கத்துக்கோ அன்றி, ஈழத் தமிழர்களுக்கோ உதவி செய்ய மாட்டா என்பது நிறுதிட்டமான உண்மை.

ஆம், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு சர்வதேச அரங்கில் மிகப் பெரும் மதிப்பும் மரியாத்தையும் கௌரவமும் பெருகி வருகிறது.

பிரதமர் மோடி கூறுவதை உலகம் ஏற்றுக் கொள்ளுமளவில் வெளிநாடுகளுடனான அவரின் உறவு பலப்பட்டுள்ளது.

அண்மையில் அமெரிக்காவுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட பிரதமர் மோடிக்கு அமெரிக்க அதிபர் ஜோ பைடன் உற்சாகமான வரவேற்பை வழங்கினார்.

அதேநேரம் அமெரிக்கப் பாராளுமன்றத்தில் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் உரையாற்றியபோது, அமெரிக்கப் பாராளுமன்ற உறுப்பினர்கள் 15 தடவைகள் எழுந்து நின்று கரகோசம் செய்து பிரதமர் மோடியை உற்சாகப்படுத்தினர்.

வெளிநாட்டுத் தலைவர் ஒருவரின் உரைக்கு அமெரிக்கப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பதினைந்து தடவை எழுந்து நின்று கரகோசம் செய்தனர் எனில், அது பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு மட்டுமே என அமெரிக்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேபோல அமெரிக்கப் பயணத்தை முடித்துக் கொண்டு எகிப்துக்குச் சென்ற பிரதமர் மோடிக்கு அந்நாடு அமோக வரவேற்பு வழங்கியது.

அத்துடன் அந்த நாட்டின் உயரிய விருதையும் அந்நாட்டு அதிபர் பிரதமர் மோடிக்கு வழங்கி வைத்தார்.

கூடவே அந்த நாட்டின் முஸ்லிம் பிரதிநிதிகள் பிரதமர் மோடியை ஒரு பெரும் தலைவராகப் போற்றி மதிப்பளித்தனர்.

இவ்வாறாக ஒட்டுமொத்த சர்வதேச நாடுகளினது மதிப்புக்கும் மரியாதைக்குமுரிய இந்தியப் பிரதமர் மோடியை நம் தமிழ் அரசியல் தலைவர்கள் உடனடியாகச் சந்தித்து இனப் பிரச்சினைக்கான தீர்வைப் பெற்றுத் தரு மாறு கேட்க வேண்டும்.

இதைவிடுத்து இந்தியப் பிரதமர் மோடியை நாம் அசட்டை செய்வோமாயின், அதைவிட்ட ஊனத்தனமான அரசியல் வேறு எதுவுமாக இருக்க முடியாது.

### நல்லிணக்க ஆணைக்குழுவின்

# பரிந்துரைகளை அமுல்படுத்தாததே சர்வதேச அழுத்தங்களுக்கு காரணம்

### புத்தசாசன அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க

(கொழும்பு)

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் ஊடாக பரிந்துரைக்கப்பட்ட விடயங்களை நாம் நடைமுறைப்படுத்தியிருந்தால், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேசத்தின் அழுத்தங்களை எதிர்கொள்ள வேண்டியேற்பட்டிருக்காது.

எவ்வாறிருப்பினும்காலத்தின் தேவைக்கேற்ப புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தை நடைமுறைப்படுத்துவதில் எவ்வித சிக்கலும் இல்லை என புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் பிரயோகத்தை நிறுத்துமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளமை குறித்து வினிவிய போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

வடக்கில் காணப்பட்டாலும், தெற்கில் காணப்பட்டாலும் பயங்கரவாத செயற்பாடுகளை அனுமதிக்க முடியாது.பயங்கரவாதிகளுக்கு நாட்டில் ஆதிக்கம் செலுத்த இடமளிக்க முடியாது.

தற்போது இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள பயங்கர்வாத எதிர்ப்பு சட்ட மூலத்தை விட, உலகளாவிய ரீதியில் பயங்கரவாத செயற்பாடுகள் மாற்றமடைந்துள்ளன.

அவர்களின் ஆயுதங்கள்,உபகரணங்கள் மாற்றமடைந்துள்ளன. இவற்றுக்கு பொருத்தமான சட்ட திருத்தங்கள் அல்லது புதிய சட்டங்களை அறிமுகப்படுத்தப்படுவதில் எவ்வித சிக்கலும் இல்லை.

இதனை விட கடுமையான சட்டங்களே ஏனைய நாடுகளில் காணப்படுகின்றன. பிரித்தானியாவில் மிகக் கடுமையான சட்டம் நடைமுறையிலுள்ளது.

மனித உரிமைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரில் எமக்கெதிராக கோஷமெழுப்பும் நாடுகளில் பயங்கரவாதத்துக்கு எதிராக மிகக் கடுமையான சட்டங்களல்லவா நடைமுறையிலுள்ளன.பின்லேடனை தேடிச் சென்று துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதல்லவா?

எம்மிலும் குறைபாடுகள் உள்ளன. 2010இல் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு நிறுவப்பட்டது. அந்த ஆணைக் குழுவின் ஊடாக பரிந்துரைக்கப்பட்ட விடயங்களை நாம் நடைமுறைப்படுத்தியிருந்தால் இவ்வாறான அழுத்தங்களை எதிர்கொள்ள வேண்டியேற்பட்டிருக்காது. ஆனால் நாம் அதனை செய்யவில்லை என்றார். (ம-7)

## சுன்னாகம்-தெல்லிப்பழை பகுதிகளில் கொள்ளை

### இரு சந்தேக நபர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.சுன்னாகம் மற்றும் தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுகளில் இடம்பெற்ற பல்வேறு கொள்ளை சம்பவங்களுடன் தொடர்புடைய இரு சந்தேக நபர்கள் யாழ்.காங்கேசன் துறை மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் அளவெட்டி பகுதியில் பாடசாலை அதிபர் ஒருவரின் வீட்டினுள் புகுந்த திருடர்கள் சுமார் 5 லட்சம் பெறுமதியான இலத்திரனியல் பொருட்களை கொள்ளையடித்து சென்றனர்.

சம்பவம் தொடர்பாக காங்கேசன்துறை மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் நிதர்ஷன் தலைமையிலான பொலிஸ் குழுவினர், நடத்திய விசாரணைகளில் அளவெட்டி பகுதியை சேர்ந்த 21 வயது மற்றும் 25 வயதான இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான சந்தேக நபர்களிடமிருந்து கொள்ளையடித்த இலத்திரனியல் பொருட்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். கைதான சந்தேக நபர்கள் தெல்லிப்பழை பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ள நிலையில் தெல்லிப்பழை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மேலும் கைதான சந்தேகநபர்கள் சுன்னாகம் - தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுகளில் இடம்பெற்ற பல கொள்ளை சம்பவங்களுடன் தொடர்புபட்டுள்ளதாக கூறியுள்ள பொலிஸார் மேற்படி இரு பொலிஸ் பிரிவுகளிலும் அண்மைய நாட்களில் திருட்டு சம்பவங்கள் அதிகரித்துள்ள நிலையில் பொதுமக்கள் விழிப்புடன் செயற்படுமாறும் பொலிஸார் கேட்டுள்ளனர். (ம-7)

## கைலாச வாகன வெள்ளோட்டம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை வெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவமானது கடந்த 22ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி சிறப்புற இடம்பெற்றுவரும் நிலையில்

இவ்வாலயத்திற்கான கைலாச வாகனம் புதிதாக அமைக்கப்பெற்று ஆலய மஹோற்சவத்தின் 6ம் திருவிழாவாகிய இன்று நண்பகல் 12.00 மணிக்கு புதிய கைலாச வாகன வெள்ளோட்டமும் இரவு 7.00 மணியளவில் புதிய கைலாச வாகனந்தனில் அம்பாள் எழுந்தருளலும் பக்திபூர்வமாக இடம்பெறவுள்ளது. (ம-7)

## வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்கான தொழில் கற்கை நெறிகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையினால் வெளிநாட்டு வேலை வாய்ப்பினை எதிர்பார்த்திருப்போருக்கான பகுதி நேர NVQ கற்கை நெறிகள் யாழ்ப்பாணத்தில் எதிர் வரும் 04 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது

இக் கற்கை நெறியினை கற்பதனூடாக தங்கள் தொழில்த் திறன்களை விருத்தி செய்து இலகுவில் தொழில் வாய்ப்பினை பெற்றுக்கொள்ள முடியுமென்பதோடு இக்கற்கைநெறி தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 021 222 7949,071 031 8737, 077 716 1955 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாக அழைப்பினை ஏற்படுத்துவதனூடாகவோ அல்லது இல. 12/4 கே.கே.எஸ் வீதி (வீரசிங்கம் மண்டபம் 4ம் மாடி) யில் அமைந்துள்ள இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் மாவட்ட காரியாலயத்தினை நாடுவதனூடாகவும்பெற்றுக்கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## யாழ்.மாநகரசபையின் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி நாளை காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணிவரை நடமாடும் சேவை ஸ்ரான்லி வீதியிலுள்ள NSR திருமண மண்டப நுழை வாயிலில்நடைபெறவுள்ளது.

வட்டாரம் 14 மற்றும் 15 ஆம் வட்டாரங்களிற்கான ஆதனவரி அறிவித்தல் படிவம் /சோலை வரி வழங்கல் ,பெயர் மாற்ற விண்ணப்ப படிவம் வழங்கல் ,துவிச்சக்கர வண்டி உரிமம் வழங்கல் போன்ற சேவைகள் நடைபெறவுள்ளது.

இதன் போது பொது மக்களால் இதுவரை காலமும் செலுத்தாதுள்ள ஆதன வரி நிலுவைகள் மற்றும் நடப்பாண்டு ஆதனவரி போன்றவற்றை பெற்று யாழ்.மாநகரசபையின் அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன் நடப்பாண்டின் ஆதனவரியினை முழுமையாக செலுத்தும் பட்சத்தில் மூன்றாம், நான்காம் காலாண்டுக்கான ஆதனவரியின் 5% கழிவினைப் பெற்றுக் கொள்ள முடியும்.தங்களது ஒத்துழைப்பினை வழங்கியுதவுமாறுயாழ்மாநகரசபை அறிவித்துள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும் விஜயன் வருகையிலிருந்து

## பொலநறுவை யுகம் முடியும் வரை- பகுதி I

02

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



அவர்கள் பயன்படுத்திய காசுகள் பல தமிழ்நாட்டு ஆற்றுப்படுகைகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கந்தரோடையில் கண்டுபிடிக்கப்பட்ட இந்திய குறியிடப்பட்ட (கி.மு. 300 ஆம் ஆண்டு) நாணயம். நன்றி: H.W. கோட்ரிங்டன்.



முத்திரைக் காசுகள் கி.மு. 5 ஆம் நூற்றாண்டு முதல் கி.மு. 2ஆம் நூற்றாண்டின் இறுதி வரை புழக்கத்தில் இருந்திருக்கின்றன. இக்காசுகளை புராணக் காசுகள் அல்லது அச்சுகுத்திய காசுகள் அல்லது முத்திரைக் காசுகள் என்பர். இவ்வகைக் காசுகளை உலோகங்களை உருக்கி, சம்மட்டி கொண்டு அடித்து தகடுகளாக மாற்றி அதை சிறுசிறு துண்டுகளாக வெட்டி அவற்றின் மேல் முத்திரைப் பொறிகளைக் கொண்டு முத்திரை பதித்தனர். ஆரம்பகாலத்தில் ஒரு பக்கத்தில் மட்டும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட குறியீடுகளும் பின்பக்கத்தில் குறியீடுகள் எதுவும் இல்லாமலும் இருந்தன. குன்றுகள், மலைகள், மரங்கள், மீன், கதிரவன், சந்திரன், யானை, மயில், பாம்பு, எருது, வில்-அம்பு போன்ற 300 இற்கும்மேற்பட்டகுறியீடுகளை உடைய பண்டைய நாணயங்கள் ஆய்வில் கிடைத்துள்ளன.

இக்காசுகள் பெரும்பாலும் சதுரம், நீள்சதுரம், வட்டம், நீள்வட்டம், முக்கோணம் போன்ற வடிவங்களில் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வகை நாணயங்கள் இந்தியா முழுவதும் பரவலாக செலவாணியில் இருந்துள்ளன என்பது தெரிகின்றது. சங்க காலத்தில் சேர,சோழ, பாண்டிய மன்னர்கள் வெள்ளி முத்திரைக் காசுகளை வெளியிட்டுள்ளனர் என்பதும் காணக்கூடியதாக உள்ளது.

சேர, சோழ, பாண்டியன், மலைய மான் மன்னர்களின் சதுர மற்றும் நீள் சதுர வடிவ காசுகள் கிடைத்துள்ளன. ஒரு சில சோழர் மற்றும் சேரர் காசுகள் வட்ட வடிவத்திலும் கிடைத்துள்ளன. நெல்லிக்காய் வடிவிலும் வேப்பம்பழம் வடிவிலும் சில பொற்காசுகள் நாணயம் சேகரிப்பாளர்களால் சேகரிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. கிடைக்கப்பட்ட நாணயங்களில் மூவேந்தரின் புலி, மீன், வில்- அம்புச் சின்னங்கள் பொறிக்கப்பட்டிருப்பதையும் காணலாம். இவ்வாறு கிடைக்கப் பெற்ற நாணயங்களை பற்றிய மாறுபட்ட கருத்துக்களும் உண்டு.

சேரர், சோழர், பாண்டியர் செப்புக்காசுகளில் யானை சின்னம் இடமாகவோ, வலமாகவோ, காசின் முகப்பில் அமைந்துள்ளது. யானை உருவத்திற்கு மேலாக மங்கலச் சின்னங்கள், ஸ்வஸ்திகம், கும்பம், மத்தளம் போன்ற உருவங்களும் சிறு உருவங்களாக பொறிக்கப்பட்டுள்ளன. காசுகளின் பின்புறத்தில் அந்தந்த மன்னர்களின் குல மரபுச் சின்னங்களான, வில் -அம்பு, புலி, அங்குசம் வரை கோட்டுருவில் மீன் சின்னம் பதிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் முகப்பில் யானைச் 'சின்னமே அச்சிடப்பட்டுள்ளன. இதைவிட குதிரை,மாடு அல்லது காளை, சிங்கம், மீன், ஆமை சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. கிடைக்கப் பெற்ற செப்புக் காசுகளின் எடை500 மில்லிகிராம் முதல் 16 கிராம் எடை வரை பல்வேறு அளவுகளில் உள்ளன. காசுகளின் எடைகள் அவற்றின் மதிப்பை காட்டுவனவாக இருக்கக் கூடும் என்று கருதப்படுகிறது.

சங்க காலக் காசுகளில் யானைச் சின்னம் பொறிக்கப்பட்டதன் நோக்கம், அரசர்களின் வலிமையையும் மேன்மையையும் காட்டுவதற்காக இருக்கலாம். செல்வத்தை குறிப்பிட மாடு சின்னமாகக் கருதப்பட்டது. வலிமையையும் பொலிவையும் காட்டும் சின்னமாக காளை/எருது அமையும். நாணயத்தில் சைவ சமயச் சின்னமாக, சிவனின் வாகனமாக கருதப்படும் காளை, நாணயங்களில் பொறிக்கப்பட்டிருக்கக் கூடும். பாண்டியனின் செம்பு காசுகள், சேரனின் செம்புக் காசுகளிலும் மாடு சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது.

வளமான வாழ்வையும் செல்வச் செழிப்பையும் நீரின் ஆற்றலையும் கடல் கடந்து தம் ஆட்சி பரந்து உள்ளதையும் காட்ட மீன் சின்னம் நாணயங்களில் இடம் பெற்றுள்ளன. நீர்நிலைகளில் வாழும் மீன்கள் தன் குஞ்சுகளை கண் இமைக்காது காப்பது போல, அரசர்கள் தம் மக்களை பகைவர் தம் படைப்பிலிருந்து காத்து ரட்சிக்க வேண்டும் என்பதைக் காட்ட, காசுகளில் மீன் சின்னத்தைப் பொறிக்கப்பட்டது எனலாம். இவ்வாறு பல வேறு கருத்துக்கள் உள்ளன.

வேங்கைபுலி எப்படி பகை விலங்குகளை தாக்குகிறதோ அது போல பகைவரைத் தாக்கி வீழ்த்துபவன் என்பதை சுட்டிக்காட்ட நாணயங்களில் புலிச் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது எனலாம். சங்ககால சோழ மன்னரின் வட்ட வடிவ செம்புக் காசுகளிலும் வட்ட வடிவ ஈயக் காசுகளிலும் முகப்பில் யானைச் சின்னமும் புறத்தில் புலிச்சின்னமும் பொறிக்கப்பட்டுள்ளன.

வேந்தன் தன் பகை மன்னர்களை வென்று தன் பெருமையை நிலைநாட்ட பிற மன்னர்களுடன் குதிரை மீது ஏறி போர் புரிகிறான். குதிரைகள் வேகம் மற்றும் வீரத்திற்கு பெயர் பெற்றது இதன் பொருட்டு நாணயங்களில் குதிரை சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது. அரேபியா முதலிய அயல் நாடுகளில் இருந்து குதிரைகள் சங்க காலத்திலேயே மரக்கலம் மூலம் கடல் வழி இறக்குமதி செய்யப்பட்டன. குதிரை பூட்டப்பட்ட தேர்களை உடையவன் சங்ககாலச் சோழ மன்னன் என்பதை காட்ட அவர்கள் வெளியிட்ட காசுகளின் முகப்பில் யானை மற்றும் குதிரை பூட்டப்பட்ட தேர்ச் சின்னத்தையும் உடன் பொறித்துள்ளனர். குதிரை பெருமையின் சின்னம். கானகத்தில் வாழும்.மிருகங்களிலும் ராஜாவாக சிங்கம் கருதப்படுவது போல மண்ணகத்து மன்னன் சிங்கம் போன்றவன் என்பதை காட்ட நாணயங்களில் சிங்க சின்னத்தை பொறித்துள்ளனர். சங்ககாலச் சேரர் வெளியிட்ட வட்ட வடிவமான செம்புக் காசுகளில் அமர்ந்த நிலையில் சிங்கத்தின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது மற்றும் பாண்டியர், சோழ நாணயங்களில் சிங்க உருவம் முகப்பில் பொறிக்கப்பட்டிருக்கிறது.



இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட சங்க காலப் பாண்டிய நாணயம், இரண்டு குன்றின் சின்னங்களுக்கு இடையே உள்ள ஒரு கோவிலுக்கு கீழ் யானை உள்ளது. கி.மு. 100
நன்றி: பிரிட்டிஷ் அருங்காட்சியகம்

### பெருவழுதி நாணயம்

பெருவழுதி நாணயம் என்பது சங்ககால பாண்டியர் வெளியிட்ட செப்பு நாணயமாகும். 1987 ஆம் ஆண்டு கிருஷ்ணமூர்த்தி என்பவர் பெருவழுதி என தமிழ் பிராமி எழுத்துக்கள் கொண்டு பெயரிட்ட 13 நாணயங்களை வெளியிட்டார். இந்நாணயங்களில் மீன்கள், 1, 2 அல்லது 4 ஆமைகளும் யானை, குதிரை, வேலியிட்டமரம், காளத் தலை, மூன்று அல்லது ஆறு முகடுகளுடைய மலை, ஆறுபுள்ளிகள், சிவலிங்கம், காளை, கோயில் ஆகிய சின்னாங்கள் முன் பக்கத்திலும் பெருவழுதி என்று எழுதப்பட்ட எழுத்துக்கள் பின்பக்கத்திலும் காணப்படுகின்றன. இவற்றில்காணப்படும் சின்னங்கள் முத்திரை நாணயங்களிலும் காணப்படுகிறது.

மதுரையை ஆண்ட பாண்டிய மன்னன் வெளியிட்ட பாண்டியன் நாணயம்.



நாணயத்தின் முகப்பில் ஒரு யானை, மற்றைய சின்னங்கள் புனித விளக்கு, இரண்டு கும்பங்கள், பிறை நிலவு பீடங்களில் நிற்கும் திரிசூலங்கள் உள்ளன. பின்பக்கத்தில் ஒரு மீனின் கோடு வரை படத்தைக் காட்டுகிறது, இவை கி.மு 200-100 பாண்டியர்களின் முக்கிய அடையாளமாக விளங்கியது. இதேபோன்ற நாணயங்களை பால் ஈ. பீரிஸ் என்பவர் கந்தரோடையில் கண்டுபிடித்தார்.
நன்றி ஆர்.கிருஷ்ணமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடரும்)

## மைத்திரி...

தலைவரும், முன்னாள் ஜனாதிபதியு மான மைத்திரிபால சிறிசேன நாளை யாழ்ப்பாண மாவட்டத்திற்கு வருகை தரவுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் அழைப்பின் பெயரில் நாளை யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் மைத்திரிபால சிறிசேனா, மூன்று நாட்கள் யாழ்ப்பாணத்தில் தங்கி யிருந்து பல்வேறு பொது நிகழ்வுகளி லும், சந்திப்புக்களிலும் ஈடுபடவுள் ளார். (ம-7)

## வரிசை யுகத்தை...

வந்ததை நாம் ஒருபோதும் மறந்து விடக்கூடாது என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜயவர்த்தன தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல்வேறு குற்றச்சாட்டுக்களை எதிர் கொண்டு நாட்டை வங்குரோத்து நிலை யில் இருந்து காப்பாற்றியுள்ளதாகவும் தெரிவித்தார்.

நிதியை பலப்படுத்தி நாட்டின் அடிப் படைத் தேவைகளை பூர்த்தி செய்த வற்றை மறந்துவிட்டு இந்த உண்மை தெரியாமல் எதிர்க்கட்சிகள் தற்போது குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின் றன என்றும் ருவான் விஜயவர்த்தன குறிப்பிட்டார். (ம-7)

## இலங்கையின்...

இயலுமான வகையில் அதிகபட்ச ஆதரவை வழங்குவதாக சீன வெளி யுறவு அமைச்சர் இதன்போது தெரி வித்துள்ளார்.

ஒத்துழைப்பு தொடர்பில் சீனா முன் மாதிரியாக செயற்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே, அமைச்சர் அலி சப்ரியின் சீன சுற்றுப்பயணம் எதிர் வரும் வெள்ளிக்கிழமை நிறைவடைய வுள்ளது.

இதன்போது உலக அபிவிருத்தி மாநாட்டில் இலங்கையை பிரதிநிதித் துவப்படுத்தி அமைச்சர் அலி சப்ரி கலந்துகொள்ளவுள்ளார். (ம-7)

## கடன் மறுசீரமை...

குழுவின் விசேட கூட்டம் இன்று காலை 11.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த விவாதத்திற்குப் பிறகு பிற்பக லில் வாக்கெடுப்பு நடைபெறுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவசர பாராளுமன்றக் கூட்டம் காரணமாக அனைத்து அமைச்சர் களையும் இந்த வாரம் கொழும்பில் தங்குமாறு ஆளும் கட்சி அமைப் பாளர் அலுவலகம் ஏற்கெனவே அறி வித்திருந்தது.

மேலும் அவர்கள் வெளிநாடு செல்ல வேண்டாம் என தெரிவிக்கப்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இது தொடர்பில் கலந்துரையாடுவதற்காக ஆளும் கட்சி உறுப்பினர்கள் குழு கூட்டம் ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க தலைமை யில் இன்று நடைபெறவுள்ளது. (ம-7)

## மக்களுக்கு...

வடிக்கைகள் பற்றி இரண்டு இரா ஜாங்க அமைச்சர்களைத் தவிர அர சில் உள்ள வேறு எவரும் பேசுவ தில்லை என்று ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்க கடும் கவலையடைந்துள் ளார்.

எல்லோரும் பிரச்சினைகள் பற் றியே பேசுகின்றார்கள். அந்தப் பிரச்சி னைகளைத் தீர்ப்பதற்காக அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் பற்றியோ - தீர்க்கப்பட்ட பிரச்சினைகள் பற்றியோ பேசுவதில்லை.

இன்னும் சில மாதங்களில் தேர்தல் ஒன்றுக்குச் செல்ல வேண்டியுள்ளது. மக்களிடம் உண்மையைக் கூறாமல் இருந்தால் எப்படி தேர்தலை எதிர் கொள்வது?

அரசின் அபிவிருத்திகள் தொடர் பில் நான்தான் பேச வேண்டியுள்ளது என்று மேலும் கவலையுடன் ஜனாதி பதி பேசியுள்ளார். (ம-7)

## ஜனாதிபதி...

என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பினார்.

தெபரவெவ, உடுவில பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வந்து, உடனடியாக செய்ய வேண்டிய பிரதான செயற்பாட்டை அவர் இன்னமும் செய்யவில்லை.

இந்த நாட்டின் வறுமையில் வாழும் மக்களை அடையாளம் காண அவர் எந்தவொரு நடவடிக்கையையும் மேற் கொள்ளவில்லை.

மக்கள் தொகைக் கணக்கெடுப்புத் திணைக்களத்தின் ஊடாக அந்தப் பணி இதுவரை மேற்கொள்ளப்பட வில்லை. ஒரு வீட்டின் வரவு செலவு எவ்வாறு உள்ளதென்ற புள்ளிவிபரங் களை ஜனாதிபதி எடுக்கவில்லை.

இவ்வாறு எதனையும் மேற்கொள் ளாமல் அஸ்வெசும திட்டத்தில் எவ் வாறு உரிய பயனாளிகளை சேர்க்க முடியும்?

லேன் ஏசியா நிறுவனமானது, இந்நாட்டில் 30 இலட்சமாக காணப்பட்ட வறு மையானவர்களின் எண்ணிக்கை 70 இலட்சமாக உயர் வடைந்துள்ள தாக சுட்டிக் காட்டி யுள்ளது. 14 வீத மாக காணப்பட்ட வறுமைநிலைமை 31 வீதமாக உயர் வடைந்துள்ளதாக வும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இவ்வாறு இருக்க, வறுமை யான 70 இலட்சம் பேரில், குறிப் பிட்ட ஒரு தரப் பிற்கு மட்டும் நிவாரணத்தை வழங்க அரசாங் கம் நடவடிக்கை எடுத்துள்ளது. (ம-7)

# சீனாவுடன் இராணுவ உடன்படிக்கை இல்லை - ரணில்

(கொழும்பு)

இலங்கைக்கு சீனாவுடன் எந்த வொரு இராணுவ உடன்படிக்கையும் இல்லை என ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தனது பிரான்ஸ் பயணம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சீனாவுடன் இலங்கைக்கு இராணுவ உடன்படிக்கை உள்ளதாக கூறப்படும் விடயங்கள் வெறுமனே கட்டுக்கதை கள் எனவும், சீனா இலங்கையின் வர்த் தக நண்பன் எனவும் ஜனாதிபதி குறிப் பிட்டுள்ளார்.

எனினும், ஒட்டுமொத்த பாதுகாப்பு கட்டுப்பாடும் இலங்கையிடம் மட்டுமே இருப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். (ம-7)

தினமன்று பாராளுமன்றம் கூடிய தில்லை. இது என்னவென்று தெரிய வில்லை.

அதுவும் ஐந்து நாட்கள் தொடர்ந்து வங்கி விடுமுறை, பங்குச்சந்தைக்கும் பூட்டு. இது நாடே முடங்கும் நிலை என எச்சரித்துள்ளார்.

அத்துடன் உள்நாட்டு கடன் மறு சீர மைப்பு என்பது சர்வதேச நாணய நிதி யத்தின் முன்மொழிவு அல்ல, இது இலங்கை அரசாங்கத்தால் முன்மொழி யப்பட்டது என்றும் அவர் சுட்டிக் காட்டி யுள்ளார். (ம-7)

## அரசு...

வித்துள்ளார்.

சுதந்திர மக்கள் காங்கிரஸின் செயற்குழு மாநாடு நேற்று இடம்பெற்றிருந்தது.

இதில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வரலாற்றில் இதுவரை ஜனாதிபதி


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 26/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1612
வெற்றி இலக்கங்கள்
மகரம் 5 7 7 5 8 4
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி -2023.06.26
சீட்டிழுப்பு இலக்கம் - 1187
J 05 15 18 36
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
NATIONAL LOTTERIES BOARD

கொவிசெத
திகதி 2023.06.26
சீட்டிழுப்பு இலக்கம் 3399
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
V 13 40 46 78
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 26/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1505
U 09 11 25 53 70

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.06.26
சீட்டிழுப்பு இலக்கம் 466
வெற்றி இலக்கங்கள்
துலாம் 19 27 45 57 துலாம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/06/26
சீட்டிழுப்பு இலக்கம் 5157
V 5 0 8 9 9 3
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2131 நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.06.26 தினம் திங்கட்கிழமை
R 21 52 61 71
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,850,020/-
DLB www.dlb.lk

சனிதா Shanida
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2023.06.26
வெற்றி வாரம்: 4292
வர்ணம்: இளம் நீலம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 30,942,678.30
வெற்றி இலக்கங்கள் 41 56 68 70 ஆங்கில எழுத்து H
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/-
திகதி 2023-06-26
வெற்றி வாரம் 3843
வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 11 15 51 53 மேஷம்
DLB
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,287,580/-

கப்றுக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
T 29 09 11 37 75
சுப்பர் இலக்கம்
1307
பசுமை
2023.06.26 திங்கள்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 341,039,603.80
DLB DEVELOPMENT LOTTERIES
தொலை பேசி: 011-2 333 546-47
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஜயோதா Jayoda
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2023.06.26
வெற்றி வாரம்: 1933
வர்ணம்: செம்மஞ்சள்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 44,354,746.80
வெற்றி இலக்கங்கள் 41 55 66 70 ஆங்கில எழுத்து T
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம்: 1957
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2023.06.26
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 53,607,474.60
வெற்றி இலக்கங்கள் 55 56 65 74 ஆங்கில எழுத்து Z
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க லொத்தர் விசா
V2 TRAVELS
2022ம் ஆண்டு விண்ணப்பித்தவர்களின் பெறுபேறுகள் வெளியாகி விட்டன.
அதிஸ்டசாலியாக தெரிவு செய்யப்பட்டவர்களின் அடுத்த கட்ட விசா நடவடிக்கைகள் ஆரம்பமாகிவிட்டன.
(C-6821)
0768226240 / 0768226241

VISA விண்ணப்பங்கள்
அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா
Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்
(C-6821)
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777

கார், வான் வாடகைக்கு
கார்கள்/ வான்கள்
நாள், வார, மாத
வாடகைக்கு
விடப்படும்
(16125)
077 898 9691

மணமகள் தேவை
உத்திராடம் 3 ஆம் பாவம், 1993 கனடா, சிவில் என்ஜினியர், இந்து, யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மணமகள் தேவை.
(16097)
077 739 1549

# நாட்டின் ஒருமைப்பாட்டை ராஜபக்ஷர்களே பாதுகாப்பர்

## சாகர காரியவசம்

நாட்டின் ஒருமைப்பாட்டை ராஜபக்ஷர்களால் மாத்திரமே பாதுகாக்க முடியும் என பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

கலாவெவபகுதியில் இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது, பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்தோம். கட்சியின் உள்ளக விவகாரங்களில் ஜனாதிபதி தலையிடுவதில்லை, நாங்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் செயற்பாடுகளில் தலையிடுவதுமில்லை.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் வீழ்ச்சியடைவதற்கு பல்வேறு காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன.

பொருளாதாரமா அல்லது மக்களின் சுகாதாரமா என்ற கேள்வி எழுந்த போது பொதுஜன பெரமுன அரசாங்கம் நாட்டு மக்களின் உயிரை பாதுகாக்க முன்னுரிமை வழங்கியது.

கோவிட் பெருந்தொற்று தாக்கத்தை கட்டுப்படுத்த அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளை பெரும்பாலானோர் மறந்து விட்டனர்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் யார், யார் என பல்வேறு தரப்பினர் கேள்வி எழுப்புகிறார்கள்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியானதும் எமது ஜனாதிபதி வேட்பாளரை அறிவிப்போம்.

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் குறிப்பிடும் கருத்து அவர்களின் தனிப்பட்ட நிலைப்பாடே தவிர கட்சியின் நிலைப்பாடல்ல,

நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாக்க ராஜபக்ஷர்கள் அளப்பரிய சேவையாற்றியுள்ளார்கள். ராஜபக்ஷர்களால் மாத்திரமே நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாக்க முடியும். எதிர்வரும் காலங்களில் இடம்பெறவுள்ள தேர்தல்களில் மக்கள் ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை நிச்சயம் தோற்றுவிப்பார்கள் என்றார். (ம-7)

# மரண அறிவித்தல்



மலர்வு
11 - 06 - 1931

உதிர்வு
25 - 06 - 2023

## திருமதி. குணசிங்கம் சிந்தாமணி
### (இளைப்பாறிய அதிபர்)

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் 85/17 ஏ.வி வீதி அரியாலை, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி குணசிங்கம் சிந்தாமணி அவர்கள் 25.06.2023 இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமாரு குணசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பொன்னம்பலம் - மீனாட்சிப்பிள்ளை அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்ற முத்துக்குமாரு-செங்கமலம் அவர்களின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அபிராமிப்பிள்ளை அவர்களின் அன்புச் சகோதரியும், வையித்திலிங்கம் சங்கரப்பிள்ளை, காலஞ்சென்ற குமாரவேலு தங்கம்மா, காலஞ்சென்ற நடேசு ஆகியோரின் அன்பு மைத்துனியும் , மங்கயர்க்கரசி(கனடா), இந்துமதி(கனடா), காலஞ்சென்ற லலிதாமதி, தேவராசன்(கனடா), இளங்குகராசன்(நோர்வே), ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற நாகேஸ்வரன், சண்முகசுந்தரம், ஹனிஸா, பானு ஆகியோரின் அன்பு மாமியாரும், தனராஜ், செந்தூர்ராஜ், தசலக்சன், பிரியதர்சன் விமலதர்சனா, பிரதீபா, சரண்யா, சசிறாஜ், ரமண்ராஜ், தனயன், தனுசன், தகயவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், டிஷான், ஷகிரா, ஹர்சித், பிரிசன், ரோகித், ராணியா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 29.06.2023 வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் சித்துபாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அறியத்தருகிறோம்.

தகவல்
குடும்பத்தினர்

(16107)

# தந்தையும் மகனும் வெட்டிப் படுகொலை

## அநுராதபுரத்தில் சம்பவம்

அநுராதபுரம் - கெக்கிராவை பிரதேசத்தில் தந்தையும் மகனும் வாளால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

மகளின் காதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்த நிலையிலேயே தந்தையும் மகனும் இவ்வாறு வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கெக்கிராவை பிரதேசத்தில் இவ்வருடம் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை எழுதிய மாணவி ஒருவர், அப்பிரதேசத்திலுள்ள ஓட்டோ சாரதியான இளைஞர் ஒருவரைக் காதலித்து வந்துள்ளார்.

இதற்குக் குறித்த மாணவியின் தந்தையும், சகோதரரும் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வந்துள்ளனர்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை தனது காதலியின் வீட்டுக்கு ஓட்டோவில் சென்ற காதலன், காதலியை வலுக்கட்டாயமாகத் தனது வீட்டுக்கு அழைத்துச் செல்ல முற்பட்டுள்ளார்.

இதன் போது காதலன் மீது காதலியின் தந்தையும், சகோதரரும் கொட்டன்களால் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தாக்குதலில் காயமடைந்த காதலன், தனது ஓட்டோவில் மறைத்து வைத்திருந்த வாளால் காதலியின் தந்தை தையையும், சகோதரரையும் சரமாரியாக வெட்டி விட்டு அங்கிருந்து ஓட்டோவில் தப்பியோடியுள்ளார்.

53 வயதுடைய காதலியின் தந்தை சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். 25 வயதுடைய காதலியின் சகோதரர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்று மாலை சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் 26 வயதுடைய இளைஞரைக் கைது செய்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் புத்தூரில் 24 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- புத்தூர் தண்ணீர் தாங்கி அருகாமை(நிலப்பரப்பு)
- மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- வியாபார நிலையங்கள், திருமண மண்டபங்கள், வீடு அமைப்பதற்கு உகந்த இடம்
- ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்.
- பார்வையிடும் நேரம் காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை
- நன்னீர் ஊற்று.
(16106)
076 733 6047
076 755 8606, 076 911 9371

VISA விண்ணப்பங்கள்
அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா
Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்
(C-6818)
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும்.
(16104)
076 825 7716 (ஆகாஸ்)

TECHNO WORLD
தொழில்நுட்பக் கல்லூரி
(வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்)
புதிய பிரிவு A/L 2025
- பொறியியல் தொழில்நுட்பவியல்
- உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல்
- தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- ICT, விவசாயம், புவியியல், கணிதம், சித்திரம்
(C-6820)
திகதி: 01.07.2023 (சனி) ஆரம்ப நேரம்: 8.30 am
தொடர்புகளுக்கு : 077 017 5346

இப்பத்திரிகை, வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் ... இலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org